RE/MAX Realtron BLUE FORCE
TEAM BLUE FORCE BUYING · SELLING · LEASE · PRE CONSTRUCTION
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANCE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி! குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 30, 05 ஜனவரி 2024 இதழ்:- 34

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com


## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! ஜனவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லக் குழந்தைகளுக்கு 2024 ஜனவரி 10ம் திகதி முதல் 31ம் திகதி வரை உணவளிக்கவுள்ள கருணையாளர்கள் தயவு செய்து 10 ஜனவரி 2024 திகதிக்கு முன்னதாக தங்கள் விபரங்களைத் தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம். காரணம் பெரிதாக ஒன்றுமில்லை. இரு வார கால விடுமுறை தேவைப்படுகின்றது. அனைத்துச் செயற்திட்டங்களும் வழமை போன்று நடைபெறும். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்காவின் யாழ்.விஜயம்:- பொலிசாரின் கோரிக்கையை நிராகரித்த நீதிமன்றம்

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் யாழ்ப்பாண விஜயத்தின் போது எதிர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதை தடுக்கக் கோரி யாழ்ப்பாண பொலிஸார் விடுத்திருந்த கோரிக்கையை யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றம் நிராகரித்துள்ளது. (3ம் பக்கம்)



ஈழநாடு மின்னிதழில் பார்க்க
eelanadu.ca

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
3-1286 Kennedy Rd.
Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Life & Health Insurance Advisor
Dir: 416 528 1407
gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund
Desjardins Manulife Foresters

## ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளர் தமிழர்கள் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்த முடியும் - நிலாந்தன்



பொது வேட்பாளர் ஒருவரை நிறுவத்து வதன் மூலம் தமிழர்கள் உள்நாட்டுக்கும் சர்வதேசத்துக்கும் தமது அரசியல் நிலைப்பாட்டைத் தெளிவாக வெளிப்படுத்த முடியும் என்று அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் தெரிவித்துள்ளார். ஜனாதிபதித் தேர்தல் புதிய ஆண்டில் நடைபெறுவதற்கான வாய்ப்பு அதிகளவில் உள்ளது. இதில் தமிழர் தரப்பு எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பது பற்றி வெவ்வேறு கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன. தென்னிலங்கை ஜனாதிபதி வேட்பாளர்களுடன் இனப்பிரச்சினைக்கான தீர்வுப் பற்றிப் பேசி அதில் இணக்கம் காண்பவரை ஆதரிப்பது, தமிழ்த் தரப்பில் ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவது, தமிழ் மக்கள் தேர்தலைப் பகிஸ்கரிப்பது என்று மூன்று விதமான (4ம் பக்கம் பார்க்க)

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக உங்களோடு நாங்கள்
24/7 365
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

## மகிந்தாவின் கனவு மெய்ப்படுமா?

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை தனது காலத்தில் மீண்டும் மக்கள் செல்வாக்குடைய கட்சியாக கட்டியெழுப்பா விட்டால் மற்றைய ராஜபக்சாக்களினால் எதிர்காலத்தில்(19ம்பக்கம் பார்க்க)



BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
Phone: (416) 321-0110
MORTGAGE ALLIANCE
1-877-366-2487


WISHING YOU AND YOUR FAMILY A JOYFULL
HAPPY HOLIDAYS AND A PROSPEROUS YEAR 2024
THANK YOU TO ALL OF MY CLIENTS, FAMILY, AND FRIENDS FOR TRUSTINGME WITH YOUR REAL ESTATE NEEDS DURING THE LAST 21 YEARS.
We hope to continue working with you in the future
Siva Kandiah
Sales Representative
Dir: 416-301-9540
sivakandiahhome@gmail.com
Team SIVA
WILL BRING THE BEST RESULTS!
Piravien Siva
B.Comm.
Sales Representative
Dir: 647-221-5220
piravien@gmail.com
21 Years Real Estate Experience
HomeLife Today Realty Ltd.,
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply
HOMELIFE
HIGHER STANDARDS
Bus: 416.298.3200
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT
• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY
Simcoe St N & Conlin Rd
Oshawa $279,000
Bachelor/Studio: 1 Washrooms: 1
Condo Steps To The University
Warden/Steeles
Scarborough $760,000
Bedrooms: 2+1 Washrooms: 2
Over 1900 Sqft Of Living Space
Bathurst & Mulock
Newmarket $788,000
Bedrooms: 3 Washrooms: 2
End unit with Beautiful Surroundings
Hwy 115/Hwy 2/Hwy 401
Clarington $1,095,000
Bedrooms: 4 Washrooms: 3
Premium Private Lot!
Kennedy Rd & Bovaild Dr. E
Brampton $1,100,000
Bedrooms: 3 Washrooms: 3
Renovated to separate entrances
Eglinton Ave & Danforth Rd
Toronto $1,150,000
Bedrooms: 4 Washrooms: 4
End Unit Townhouse,Seconds To TTC
Woodbine Ave & Mt Albert Rd
East Gwillimbury $1,250,000
Bedrooms: 3 Washrooms: 2
Approx. 90 Ft Of Frontage
Simcoe St / Buckingham
Oshawa $1,349,998
Bedrooms: 5 Washrooms: 4
Victorian Style home in Oshawa
Bayly St/West Shore Blvd
FOR LEASE
Pickering $3,350
Bedrooms: 3 Washrooms: 2
Renovated Bungalow, Near 401
Kennedy/401
FOR LEASE
Scarborough $2,700
Bedrooms: 2 Washrooms: 2
Open concept kitchen, lots of storage
Avenue & Lawrence
FOR LEASE
Toronto $2,350
Bedrooms: 1 Washrooms: 1
Brand New Unit. All Stainless Applia
Altona Rd & Twyn Rivers Dr
FOR LEASE
Pickering $2,000
Bedrooms: 2 Washrooms: 1
Well Maintained Basement Suite
Looking for more house?
www.AgentSiva.com
WILL BRING THE BEST RESULTS!

**EELANADU**
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# திருமலை 5 மாணவர்கள் படுகொலை விவகாரம்:- 18 வருடங்கள் கடந்தும் நீதி நிலைநாட்டப்படாமை குறித்து மன்னிப்புச்சபை விசனம்

திருகோணமலை 5 மாணவர் படு கொலைச் சம்பவம் இடம்பெற்று 18 வருடங்கள் பூர்த்தியடைந்துள்ள நிலையில் அது குறித்து உண்மை, நீதி மற்றும் இழப்பீடு ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் தவறியிருப்பதாக சர்வ தேச மன்னிப்புச்சபை விசனம் வெளி யிட்டுள்ளது.

02 ஜனவரி 2024 செவ்வாய்கிழமை யுடன் திருகோணமலை 5 மாணவர் படுகொலை இடம் பெற்று 18 வருட ங்கள் பூர்த்தியடைந்துள்ளன. கடந்த 2006 ஆம் ஆண்டு ஜனவரி 2 ஆம் திகதி திருகோணமலை நகரில் 5 தமிழ் மாணவர்கள் பாதுகாப்புப் படையினரால் கொல்லப்பட்டனர்.


இது குறித்து கருத்து வெளியிட்டு ள்ள சர்வதேச மன்னிப்புச்சபை, திரு கோணமலை 5 மாணவர் படுகொலை ச்சம்பவம் இடம் பெற்று 18 வருடங் கள் கடந்துள்ள நிலையிலும், அது குறித்து உண்மை, நீதி நிலை நாட்டப்படுவதையும், இழப்பீடு வழங் கப்படுவதையும் உறுதி செய்வதற்கு இலங்கை அரசாங்கம் தவறியிருப்ப தாக சுட்டிக் காட்டியுள்ளது.

அது மாத்திரமன்றி முக்கிய ஆதாரங் கள் இருந்த போதிலும் அது மூடி மறைக்கப்பட்டிருப்பதாகவும் மன்னி ப்புச் சபை தெரிவித்துள்ளது.

# ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்காவின் யாழ்.விஜயம்:- பொலிசாரின் கோரிக்கையை நிராகரித்த யாழ்ப்பாண நீதிமன்றம்







ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் யாழ்ப்பாண விஜயத்தின் போது எதிர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடு க்கப்படுவதை தடுக்கக் கோரி யாழ்ப் பாண பொலிஸார் விடுத்திருந்த கோரிக்கையை யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.


சட்டத்தை மீறாத வகையில், ஜன நாயக ரீதியில் எதிர்ப்பில் ஈடுபடுவதற் கான உரிமை உள்ளதாகவும் நீதிமன் றம் இதன்போது அறிவித்துள்ளது.

இதற்கமைய ஜனாதிபதி 04.01.2024 முதல் எதிர்வரும் 7ஆம் திகதி வரை வட மாகாணத்திற்கான விஜயத்தை மேற் கொள்ளவுள்ள நிலையில், அவரது வருகைக்கு எதிர்ப்பு தெரி வித்து போராட்டங்கள் முன்னெடுக்க ப்படுவதற்கு தடை விதிக்கக் கோரியே யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் பொலிஸார் வழக்கு தாக்கல் செய்திருந்தனர்.

மேலும் நாடாளுமன்ற உறுப்பினர் களான கஜேந்திரகுமார் பொன்னம் பலம், செல்வராஜா கஜேந்திரன், தவத் திரு வேலன் சுவாமிகள், காணா மலாக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்க பிரதிநிதிகள் உள்ளிட்ட 8 பேரு க்கு எதிராக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இதற்கமைய நீதிமன்றம் செவ்வாய்க்கிழமை பிறப்பி த்திருந்த உத்தரவிற்கு அமைய, வழக்கின் 8ஆவது பிரதிவாதியான தவத்திரு வேலன் சுவாமிகள் நீதி மன் றத்தில் முன்னிலையாகி தமது நிலை ப்பாட்டினை தெளிவுபடுத்தியுள்ளார்.

# தமிழரசின் தலைமைக்கு ஶ்ரீதரனே தகுதியானவர் கட்சியை உடைத்துக் கொண்டோடிய விக்கி கூறுகிறார்

இலங்கைத் தமிழரசு கட்சியின் தலைமை பதவிக்கு அந்தக் கட்சி யின் பாராளுமன்ற உறுப்பினரான சி. சிறிதரனே பொருத்தமானவர் என்று தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். தலைவர் ஆவதற்கான தகுதிகள் சுமந்திரன் எம். பிக்கு இருந்தாலும் அவர் மற்றவர்களுடன் இணைந்து செயல்படக் கூடியவர் இல்லை என் றும் கூறியுள்ளார். டான் தொலைக் காட்சியில் ஒளிபரப்பாக வுள்ள 'ஸ்பொ ட்லைற்' நிகழ்ச்சிக்கு தமிழ் மக்கள் கூட்டணியின் தலை வரும் பாராளு மன்ற உறுப்பினருமான விக்னேஸ் வரன் அளித்த நேர் காணலிலேயே மேற்கண்டவாறு தெரி வித்துள்ளார்.



இலங்கை தமிழரசு கட்சியின் தலை வராவதற்கு தற்போது போட்டியிடும் சி. சிறீதரன், ம. ஆ. சுமந்திரன், சீ. யோகேஸ்வரன் ஆகியோரில் யார் பொருத்தமானவர் என்று நினைக்கி றீர்கள் என்று கேட்கப்பட்ட கேள்வி க்கு பதிலளித்தபோதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார். மேலும் தமிழரசு கட்சியின் தலைவராவதற்கு எனது அபிப்பிராயப்படி சிறிதரன் தான் தகுதியுடையவர். ஆங்கில அறிவு அவருக்குக் குறைவாக இரு ந்தாலும் அதற்குரிய சிறந்த மொழி பெயர்ப்பாளர்களை வைத்துக் கொண்டு அவர் தன்னுடைய கடமை களை சரியாக செய்யக்கூடிய வல் லமை படைத்தவர். அவர் தமிழ் மக்களின் நெஞ்சங்களை அறிந்தவர். தமிழ் மக்களின் அபிலாசைகள் எண் ணங்கள் (22ம் பக்கம் பார்க்க)

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**



# வடக்கில் சைவ அமைப்புக்கள் எதிர் நோக்கும் பிரச்சனைகள்:- ஜனாதிபதியிடம் மகஜர் கையளிக்க கூடிய இந்து அமைப்புக்கள்

இந்து அமைப்புக்களின் ஏற்பாட்டில், வடமாகாணத்தில் சைவ அமைப்புக்கள் எதிர்நோக்கும் சமயரீதியான பிரச்சனைகள் தொடர்பான ஆலோசனை கலந்துரையாடல் ஒன்று நல்லை ஆதீன திருஞான சம்பந்தர் மண்டவத்தில் சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தம் தலைமையில் இடம் பெற்றது.

இவ் ஆலோசனை கலந்துரையாடலில், வடமாகாணத்தில் சைவ அமைப்புக்கள் எதிர்நோக்கும் 05 விடயங்கள் தொடர்பான கருத்துக்கள் கேட்கப்பட்டதுடன், அதனை நாடாளுமன்றத்தில் கொண்டு சேர்த்து அதனை அரசியலமைப்பினை உள்வாங்க வேண்டும், அதனை எதிர்வரும் 06.01.2024 அன்று யாழ்ப்பாணம் வரவிருக்கும் ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க அவர்களிடம் மகஜரும் கையளிக்கயுள்ளதாக சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தம் தெரிவித்தார்.



01. பல்லாயிரம் ஆண்டுகாலமாக வரலாறு கொண்ட இலங்கையின் இந்து சமயத்துக்கு அரசியலமைப்பில் முன்னுரிமை அளிக்கவேண்டும்

02. மதங்களின் மதமாற்ற முயற்சியைத் தடுப்பதற்கு நாடாளுமன்றத்தில் மதமற்ற தடைச்சட்டத்தினை இயற்றுக.

03இந்துமதங்களும், பௌத்தமதங்களுக்கும் தெய்வமாக போற்றப்படும் பசுக்களை எவறும் கொல்லக்கூடாது? பசுவதை தடைச்சட்டத்தினை இயற்றுக.

04.ஒவ்வொரு ஆலயங்களில் நித்தியபூஜை வழிபாட்டில் பசுவினை பூஜைகள் ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டும்.

05. ஆரம்ப முன்பள்ளி பருவத்தில் உள்ள சிறார்களின் பசுவினை பாதிப்பது பற்றிய நூல்கள் அறிமுகம் செயற்படுத்த வேண்டும். என்றவாறு காணப்படுகின்றது

இராமலிங்கேஸ்வர் அமைப்பின் செயற்பாட்டாளர் தி.சுந்தரேஸ்சன், சிவநேனை அமைப்பின் உறுப்பினர் த.புவனேந்தீரன், உருத்திரசேனை உறுப்பினர் சுஜீபன், இந்து தன்னார்ந்த தொண்டு சங்கம் தலைவர் வ.சாரகனான், திரிலங்கா புரி ஆதீனம் தி.விபுலாந்த அடியார், கோவிற்கடை ஜயப்பன் ஆலயத்தலைவர் த.கலா சாதக்குருக்கள், பசுவதை தடுக்கும் சமூக மன்ற தலைவர் ம.சிவலோகதேசிகசர்மா ஞானசீலன், உள்ளிட்ட அமைப்பின் உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளர் தமிழர்கள் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்த முடியும் - நிலாந்தன்



பொது வேட்பாளர் ஒருவரை நிறுவத்துவதன் மூலம் தமிழர்கள் உள்நாட்டுக்கும் சர்வதேசத்துக்கும் தமது அரசியல் நிலைப்பாட்டைத் தெளிவாக வெளிப்படுத்த முடியும் என்று அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் புதிய ஆண்டில் நடைபெறுவதற்கான வாய்ப்பு அதிகளவில் உள்ளது. இதில் தமிழர் தரப்பு எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பது பற்றி வெவ்வேறு கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன. தென்னிலங்கை ஜனாதிபதி வேட்பாளர்களுடன் இனப்பிரச்சினைக்கான தீர்வுப் பற்றிப்பேசி அதில் இணக்கம் காண்பவரை ஆதரிப்பது, தமிழ்த் தரப்பில் ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவது, தமிழ் மக்கள் தேர்தலைப் பகிஸ்கரிப்பது என்று மூன்று விதமான அபிப்பிராயங்கள் உள்ளன.

இதில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுவத்துவதன் மூலம் தமிழர்கள் உள்நாட்டுக்கும் சர்வதேசத்துக்கும் தமது அரசியல் நிலைப்பாட்டைத் தெளிவாக வெளிப்படுத்த முடியும் என்று அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் சமகால அரசியல் உரையரங்கு அதன் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை (31.12.2023) கோண்டாவிலில் நடைபெற்றது. இவ்வுரையரங்கில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே நிலாந்தன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தமிழ்த் தரப்பு பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த வேட்பாளர்களுடன் பேசினாலும் எவரும் வெளிப்படையாகத் தமது வாக்குறுதிகளைத் தரப்போவதில்லை. தமிழர் தரப்புக்கு ஆதரவாகக் காட்டிச் சிங்கள மக்களின் வாக்குகளை இழப்பதற்கு அவர்கள் ஒருபோதும் சம்மதிக்க மாட்டார்கள். வெளிப்படையாகத் தராத எந்தவொரு உத்தரவாதமும் தேர்தலின் பின்னர் கண்டு கொள்ளப் படாது என்பதே கடந்த கால வரலாறு.

சரத் பொன்சேகாவைத் தமிழர்கள் ஆதரித்ததன் மூலம் மஹிந்த ராஜபக்சவையே இறுதியில் வெல்ல வைக்க முடிந்தது என்பதை நினைவிற் கொள்ள வேண்டும்.

ஒப்பீட்டளவில் தமிழ்த் தரப்பின் முன்னால் உள்ள தெரிவு பொது வேட்பாளர் தான். இதில் ஒரு போதும் தமிழ் வேட்பாளர் வெற்றி பெறப் போவதில்லை. ஆனால், தாம் விரும்பம் அரசியல் தீர்வை வெளிப்படையாக முன்வைத்துத் திரளான தமிழ் வாக்குகளைப் பெறுவதன் மூலம் தமது அபிலாசையை வெளிப்படுத்த முடியும். இது சமஸ்டியாகவும் இருக்கலாம் தனி நாடாகவும் இருக்கலாம்.

ஒருவகையில் இதனைத் தமிழ் மக்களிடையே நடாத்தப்படும் பொது வாக்கெடுப்பாகக் கூடக் கருதலாம். ஆனால், இதன் வெற்றி என்பது ஒட்டுமொத்தத் தமிழ் மக்களினதும் வாக்குகளைக் திரட்டக் கூடிய ஒரு பொது வேட்பாளரைத் தெரிவு செய்வதிலேயே தங்கியுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

# தமிழ்க்கட்சிகள் பொதுவேட்பாளரை களமிறக்குவதோ அல்லது தேர்தலை புறக்கணிப்பதோ ஆபத்தானது



எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் அரசியல் கட்சிகள் கூட்டிணைந்து பொதுவேட்பாளரை களமிறக்குவதோ, அல்லது தேர்தலை ஒட்டுமொத்தமாக புறக்கணிப்பதோ நாட்டில் உள்ள ஒட்டுமொத்த தமிழர்களையும் பிளவுபடுத்தும் செயலாகவே அமையும் என்று நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

அத்துடன் கடந்த கால அனுபவங்களின் அடிப்படையில் தமிழ் அரசியல் கட்சிகள் புதிய தேசிய அரசியல் கூட்டணியையும், இன,மத,மொழி வாதற்ற வேட்பாளரையும் அடையாளம் கண்டு அதில் பங்கேற்பதே சிறந்த அரசியல் சாணக்கியமான நடவடிக்கையாக அமையும். அவ்வாறு இல்லாது விட்டால் ஒட்டுமொத்த தமிழர்களையும் பிளவுபடுத்தும் செயற்பாடாகவே அமையும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி, தமிழ் மக்கள் கூட்டணி ஆகியன தமிழ் பொது வேட்பாளர் ஒருவரைக் களமிறக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருக்கின்ற அதேநேரம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஜனாதிபதி தேர்தலை புறக்கணிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டினை வெளிப்படுத்தியுள்ளன. இந்த நிலைமைகள் தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அமைச்சர் விஜயதாச மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு கிழக்கு தமது பூர்வீகமான பிரதேசம் என்ற நிலைப்பாட்டில் உள்ள அரசியல் கட்சிகள் தமது பிரதேசத்தினை மையப்படுத்தியதாக ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளர் ஒருவரை களமிறக்குவதற்கோ அல்லது தேர்தலை மக்களின் ஆதரவுடன் புறக்கணிப்பதற்கோ முழுமையான உரித்தினைக் கொண்டிருக்கின்றன.

ஆனால் யதார்த்த நிலைமைகளைப் பற்றி அக்கட்சிகள் சிந்திப்பது தான் மிகவும் அவசியமானதாகின்றது. வடக்கு கிழக்கினை மையப்படுத்திய பொதுவேட்பாளர் ஒருவர் களமிறக்கப்பட்டால் அந்த வேட்பாளருக்கு வெறுமனே அப்பகுதிகளில் தான் ஆதரவு கிடைக்கும். வடக்கு கிழக்குக்கு வெளியில் உள்ள தமிழ் மக்கள் ஆதரவளிக்காத நிலைமையொன்று ஏற்படுவதற்கே அதிகமான சாத்தியப்பாடுகள் உள்ளன. இதனால் தேர்தல் முடிவில் நாட்டில் உள்ள ஒட்டுமொத்த தமிழ் மக்களையும் பிளவுபடுத்துவதாகவே அந்த முயற்சி மாறிவிடும் சூழலே அதிகமாக உள்ளது.

மறு பக்கத்தில், தமிழ் கட்சிகளின் தமிழ் பொதுவேட்பாளர் ஒருவர் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறப்போவதில்லை. அவ்வாறு பொதுவேட்பாளர் ஒருவர் களமிறக்கப்பட்டதன் பின்னர் தேசிய கட்சிகளின் சார்பில் களமிறங்கும் வேட்பாளர் ஒருவர் வெற்றி பெற்றால் அதன் பின்னர் அசௌகரியத்துக்குள் உள்ளாகப் போவதும் தமிழ் மக்கள் தான். ஆகவே அதுபற்றியும் தமிழ்க் கட்சிகள் கரிசனைகளைக் கொள்வதே பொருத்தமானது.

என்னைப் பொறுத்தவரையில், தமிழ் அரசியல் கட்சிகளுக்கு கடந்த காலத்தில் எடுத்த தீர்மானங்களின் அடிப்படையில் பல்வேறு அதிருப்தியான நிலைமைகள் காணப்படுவதை ஏற்றுக் கொள்கின்றேன். அந்த வகையில், தமிழ் அரசியல் கட்சிகள் தமது கடந்த கால அனுபவங்களின் அடிப்படையில் இன,மத,மொழி, வாதங்களற்ற, வாக்குறுதிகளை மறுதலிக்கின்ற வேட்பாளர் அற்றதொரு தரப்பினை அடையாளம் காண வேண்டும்.

அவ்வாறு தமிழ் அரசியல் கட்சிகள் அடையாளம் காணும் அரசியல் தரப்பானது புதிய தேசிய அரசியல் கூட்டணியாக இருப்பதோடு அதன் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமது விடயங்களையும் உள்ளீர்ப்பதற்கான பேச்சுக்களை முன்னெடுத்து தேசிய ரீதியில் பங்குபற்ற வேண்டும்.

அவ்விதமான தீர்மானமொன்றை தமிழ் அரசியல் கட்சிகள் முன்னெடுப்பதே அரசியல் சாணக்கியமாக அமைவதோடு தமிழ் மக்களின் எதிர் காலத்துக்கும் சிறந்ததாக காணப்படும். 1948இல் இலங்கை சுதந்திரமடைந்த போது, சிங்க ளம், தமிழ், முஸ்லிம் என்ற வேறு பாடுகள் இல்லாத ஒரு சூழலை உருவாக்குவதற்கு தேசிய ரீதியில் தமிழ் அரசியல் கட்சிகளின் பங்களிப்பானது மிகவும் இன்றியமையாதவொரு விடயமாகும் என்றார்.

# விஜயகாந்த் இறுதி ஊர்வலத்தில் வட்டமிட்ட கருடன்

மறைந்த நடிகர் விஜயகாந்த் இறுதி ஊர்வலத்தின் போது கருடன் வட்டமிட்டு வந்த காட்சிகள் காண்போரை மெய்சிலிர்க்க வைத்துள்ளது. பொதுமக்கள் அஞ்சலி செலுத்துவதற்காக சென்னை தீவுத்திடலில் அவரது உடல் வைக்கப்பட்டது. அங்கு, ஆயிரக்கணக்கில் மக்கள் குவிந்து அவருக்கு அஞ்சலி செலுத்தினர். பின்னர், அங்கிருந்து சுமார் 3 மணி நேரம் பயணமாக கோயம்பேட்டில் உள்ள தேமுதிக அலுவலகத்திற்கு அவரது உடலை இறுதி ஊர்வலமாக கொண்டு வந்தனர். அப்போது வழிநெடுக மக்கள் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

இந்நிலையில் விஜயகாந்த் உடல் பயணித்த இறுதி வாகனம் சென்னை செண்ட்ரல் ரயில் நிலையம் அருகே கடந்து சென்றது. அப்போது வானத்தில் மூன்று முறை கருடன் வட்டமிட்டது.

இதனை பார்த்தவர்கள் கவனித்து சொன்னதும் விஜயகாந்த் மனைவி பிரேமலதா, அவருடைய இரு மகன்கள் உட்பட அங்கிருந்த மொத்த கூட்டமும் கருடனை கைகூப்பி வணங்கினர். இந்த காட்சிகள் காண்போரை மெய்சிலிர்க்க வைத்துள்ளது.

# தமிழ்மொழியின் பெருமையை கூறாமல் என்னால் இருக்க முடியவில்லை என்கிறார் பிரதமர் மோடி

தமிழ் மொழியின் பெருமையை கூறாமல் என்னால் இருக்க முடியவில்லை என்றும், தமிழ் பண்பாட்டை பற்றி பேசாத நாளே இல்லை எனவும் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

திருச்சி விமான நிலையத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள நவீன முனையத்தை மக்கள் பயன்பாட்டுக்கு பிரதமர் மோடி திறந்து வைத்தார். இந்த விழாவில் கலந்து கொண்டு கருத்துரைக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார். இதன்போது 'வணக்கம், எனது தமிழ் குடும்பமே, முதலில் உங்கள் அனைவருக்கும் 2024 புத்தாண்டு நல் வாழ்த்துகள்.' என தமிழில் கூறி பிரதமர் மோடி பேச்சை துவக்கினார்.

மேலும், இந்த ஆண்டில் எனது முதல் நிகழ்ச்சி தமிழகத்தில் நடப்பதை பாக்கியமாக கருதுகிறேன். தமிழ் மொழியின் பெருமையை கூறாமல் என்னால் இருக்க முடியவில்லை. உலகின் எந்த இடத்திற்கு சென்றாலும் தமிழ் மொழியை புகழாமல் நான் இருந்ததில்லை.

எனக்கு பல தமிழ் நண்பர்கள் இருக்கிறார்கள், அவர்களிடம் இருந்து தமிழ் பண்பாட்டை அறிகிறேன். தமிழ் பண்பாட்டை பற்றி பேசாத நாளே



இல்லை. தமிழ் பண்பாடு உலகெங்கும் பரவ வேண்டும் என்ற விருப்பம் எனக்கு உள்ளது. காசி தமிழ் சங்கமம் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நாடு முழுவதும் தமிழை கொண்டு செல்கின்றன எனக் குறிப்பிட்டுள்ளார். தமிழ் மொழியின் பெருமையை கூறாமல் என்னால் இருக்க முடியவில்லை என்றும், தமிழ் பண்பாட்டை பற்றி பேசாத நாளே இல்லை எனவும் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

# தமிழரசுத் தலைமைக்கு சுமந்திரன் ஸ்ரீதரன் தகுதியற்றவர்கள் ! மாவை தான் தகுதியானவர்!



தமிழரசு கட்சியின் தலைமை வேட்பாளர்களான நாடாளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன் மற்றும் சிறிதரன் இருவரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமையை விரும்பாதவர்கள் என முன்னாள் வடமாகாண சபை உறுப்பினரும் ரெலோவின் நிதிச் செயலாளருமான விந்தன் கனகரட்னம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழரசு கட்சியின் தலைவர் யார் என்பது அவர்களுடைய கட்சி தீர்மானித்துக் கொள்ளட்டும். ஆனால் இவர்கள் இருவரும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஒற்றுமைக்கு எதிராகச் செயற்பட்டவர்கள்.

பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தொடர்பில் நான் அதிகம் கூற வேண்டிய தேவையில்லை. பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் 2018 ஆம் ஆண்டு பிரதேச சபை தேர்தலுக்கான வேட்பாளர் தெரிவிப்பின் போது மூன்று பிரதேச சபைகளில் சக கட்சிகளுக்கு ஆசனம் வழங்க மறுத்து விட்டார். தான்தான் கிளிநொச்சி நாட்டாமை என நினைத்து தனது ஆதரவாளர்களையே வேட்பாளராக்க வேண்டும், சக தமிழ் கட்சிகளின் வேட்பாளர்களுக்கு இடம் கொடுக்கக் கூடாது என நினைப்பவர் எவ்வாறு ஒற்றுமையை விரும்புவார்.

தமிழரசு கட்சியின் தற்போதைய தலைவராக இருக்கும் மாவை சேனாதிராஜா உண்மையிலே தமிழ் தேசியக் கூட்டமைப்பாக ஒற்றுமையாக இருக்க வேண்டும் என விரும்புபவர். ஆகவே சக தமிழ் கட்சிகளுடன் இணைந்து தமிழ் தேசியக் கூட்டமைப்பாக, தமிழ் மக்களின் குரலாக ஒலிப்பவர்கள் தான் தலைமை பதவியில் இருக்க வேண்டும் என்பது எனது தனிப்பட்ட கருத்து என அவர் மேலும் தெரிவித்தார்.

# தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தி வேட்பாளரை நிறுத்துவோம்

தமிழ் பொது வேட்பாளர் என்ற விடயம் அரசியல் களத்தில் பேசுபொருளாக மாத்திரம் இருப்பதோடு அது நடைமுறைக்கு சாத்தியமற்ற விடயம் எனவும் அதையும் மீறி அவ்வாறான முயற்சி இடம் பெற்றாலும் இந்தியாவின் கோரிக்கையின் பிரகாரம் அது கடைசியில் கைவிடப்படும் என்றும் ஐக்கிய சோஷலிச கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

அரசியல் களத்தில் நாடி பிடித்து பார்ப்பதற்காக அவ்வவ் போது இடம்பெறும் ஏற்பாடுகள் போலவே தமிழ் பொது வேட்பாளர் விடயமும். இலங்கையின் அடுத்த ஜனாதிபதி தேர்தலானது இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையிலான போட்டியாகவுள்ள நிலையில், நடைமுறைக்கு சாத்திய மற்ற விடயம் தொடர்பில் பேசி பயனில்லை.

மாலைத்தீவில் நடைபெற்றது போல மொட்டுக் கட்சிக்கு சீனாவும் சஜித் தரப்பிற்கு இந்தியாவும் பின்புலமாக இருக்கிறது. தற்போது பொது வேட்பாளர் பற்றி பேசுபவர்கள் இந்திய கோரிக்கையை ஏற்று இந்திய சார்பு வேட்பாளரையே ஆதரிப்பார்கள்' என்றும் சுட்டிக் காட்டியுள்ளார்.

தேசிய இன பிரச்சனைக்கு சுய நிர்ணய உரிமையை அடிப்படையாக கொண்ட அரசியல் தீர்வு முன்வைக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் எமது கட்சி உள்ளது. எனவே தமிழர்களின் சுய நிர்ணய உரிமைகளை மையப்படுத்தி எமது கட்சி சார்பில் ஜனாதிபதி வேட்பாளர் ஒருவர் களமிறங்குவர் எனவும் அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# விலை போதல் என்றால் என்ன?

தமிழ் மக்கள் ஜனாதிபதி தேர்தலை பகிஷ்கரிக்க வேண்டும். விலை போனவர்களே தமிழ் பொது வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்று கோருகின்றனர் – இவ்வாறு அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்திருக்கின்றார்.

ஜனாதிபதி தேர்தலை எதிர்கொள்ளும் ஓர் உத்தியாக பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது தொடர்பில் யோசிக்கலாம், என்னும் பரிந்துரையை முன் வைத்த கட்சிகள் மற்றும் சிவில் சமூக பிரதிநிதிகள் அனைவரையும் காங்கிரஸ் (முன்னணி) கட்சி விலைபோனவர்கள் என்று குறிப்பிடுகின்றது.

தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதா அல்லது இல்லையா என்னும் முடிவானது அனைத்துக் கட்சிகளினதும் இணக்கத்தில் தான் தங்கியிருக்கின்றது. இதுவரையில் இது சாத்தியமானதாகத் தெரியவில்லை.

ஏனெனில், கட்சிகள் மத்தியில் இந்த விடயத்தில் ஆகக் குறைந்தது ஓர் உரையாடல்கூட இடம் பெறவில்லை. யுத்தம் முடிவுற்றதன் பின்னரான காலப்பகுதியில் மூன்று ஜனாதிபதி தேர்தல்கள் நடைபெற்றிருக்கின்றன. இந்த மூன்று தேர்தல்களின் போதும் தமிழ் மக்கள் தென்னிலங்கையின் வேட்பாளர்களுக்கே வாக்களித்திருக்கின்றனர். ஜனாதிபதி தேர்தலைப் பொறுத்தவரையில் தமிழ் மக்களுக்கு முன்னாலுள்ள தெரிவும் அது ஒன்றுதான்.

இந்த மூன்று தேர்தல்களின் போதும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தேர்தலை பகிஷ்கரிக்குமாறே மக்களைக் கோரினார். ஆனால், அவரின் கருத்தை மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. இந்த விடயத்தில் தமிழ் மக்கள் அகில இலங்கைதமிழ் காங்கிரஸ் கட்சியை (தமிழ் தேசிய மக்கள் முன்னணி) ஒரு விடயமாக எடுத்துக்கொள்ளவில்லை. மாறாக, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கைக்கு அமைவாகவே வாக்களித்திருந்தனர்.

மேற்படி மூன்று தேர்தல்களின் போதும் தமிழ் மக்களின் வாக்களிப்புக்கு ஓர் இலக்கு இருந்தது அதாவது, ராஜபக்ஷக்களை தோற்கடிப்பது. இந்த அடிப்படையில் தான், தமிழ் மக்கள் இறுதி யுத்தத்தை வழிநடத்திய இராணுவத் தளபதிக்கும் வாக்களித்தனர். இந்த மூன்று தேர்தல்களின் போதும், 2015இல் மட்டும் தான், தமிழ்மக்களின் வாக்குகள் ஆட்சி மாற்றத்துக்குப் பங்களித்திருந்தது.

ஆனாலும் எதிர்பார்த்தவாறு, அரசியல் தீர்வு நோக்கிய பயணத்தில் எவ்வித முன்னேற்றங்களும் ஏற்படவில்லை. இவ்வாறானதொரு பின்புலத்தில் தான் நான்காவது ஜனாதிபதி தேர்தலை எவ்வாறு எதிர்கொள்வது என்னும் கேள்வி எழுந்திருக்கின்றது. தேர்தலை பகிஷ்கரியுங்கள் என்று கூறினால், மக்கள் அதை செய்யப் போவதில்லை. இந்த நிலையில் தேர்தலை எவ்வாறு கையாளலாம் என்னும் கேள்விக்குப் பதிலாகவே தமிழ் பொது வேட்பாளர் யோசனை தொடர்பில் சிந்திக்கப்பட்டது. எனினும் தமிழ்த் தேசிய கட்சிகள் மத்தியில் ஓர் இணக்கப்பாடு ஏற்படாமல் அது சாத்தியப்படப் போவதில்லை.

நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலை பேரம் பேசுவதற்கான ஒரு துருப்புச் சீட்டாகப் பயன்படுத்திக் கொள்ள முடியுமா என்னும் கேள்விதான் இங்கு முக்கியமானது. தமிழ்த் தேசிய கட்சிகளின் பிரதான இலக்கு என்ன? பதில் – தமிழ் மக்களின் அரசியல் நலன்களை வெற்றிகொள்வது இது தான் விடயம் என்றால், வாய்ப்புக்கள்

ஒவ்வொன்றையும் சாதகமாக பரிசீலிப்பதில் என்ன தவறுண்டு? இதில் விலை போவதற்கு என்ன இருக்கின்றது. அவ்வாறாயின் தேர்தலைப் பகிஷ்கரிக்குமாறு கூறுவதைக் கூட விலை போதலாக எண்ண முடியுமல்லவா?

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.

# விடுதலைப் புலிகளின் 40 லட்சம் ரூபா பணத்துடன் வெளிநாடு ஓடி கோத்தாவுடன் "டீல்" போட்டு நாடு திரும்பியவர் தான் கஜேந்திரன்



விடுதலைப்புலிகளிடம் 40 இலட்சம் ரூபா பணத்தைப் பெற்று வெளிநாடு சென்றுவிட்டு, பின்னர் ஜனாதிபதியுடனும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தாவுடனும் டீல் பேசி நாட்டுக்குள் வந்தவரே கைப்பிள்ளை கஜேந்திரன் என கடற்றொழில் மற்றும் நீரியல் வழங்கல் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வவுனியா கட்சியின் மாவட்டக் குழு உறுப்பினர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.அதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர் அந்தக் காலத்தில் கைப்பிள்ளை கஜேந்திரன், 40 ஆயிரம் சவப்பெட்டிகளைத் தயார் செய்யுங்கள் என்று நாடாளுமன்றில் கூறினார். குறித்த விடயம் சிங்கள மக்களிடத்திலும், ஆயுதம் தரித்தவர்கள் மத்தியிலும் ஒரு கொதிநிலையை ஏற்ப்படுத்தக்கூடியது. அவர் அவ்வாறு கூறிவிட்டு வெளிநாடு சென்று விட்டார்.

பின்னர் அந்தக் காலப்பகுதியில் பதவி வகித்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் ஜனாதிபதியுடன் டீல் பேசினார். தன்னிடம் பல இரகசியங்கள் இருக்கின்றன, அதனை நான் சொல்லுகின்றேன், எனது சகோதரரை விடுவியுங்கள் என்று அவர் கோரினார். பின்னரே அவர் இலங்கை வந்தார்.

அவர் வெளிநாடு செல்வதற்கு முன்பாக புலிகள் அமைப்பில் வாகனங்களுக்குப் பொறுப்பாக இருந்த குட்டி என்பவர் நாடாளுமன்றில் அவருக்குக் கொடுத்த வாகனத்தைத் தருமாறு கேட்டிருந்தார்.

அதற்கு 40 இலட்சம் ரூபா பணத்தை நாடாளுமன்றத்துக்குச் செலுத்தினாலேயே அந்த வாகனத்தை எடுக்க முடியும் என்று கைப்பிள்ளை கூற குட்டி என்பவர் அந்தப் பணத்தை அனுப்பியிருந்தார். அந்தப் பணத்தையும் கைப்பிள்ளை எடுத்துக் கொண்டு வாகனத்தைப் பூட்டி விட்ட பின்னரே வெளிநாடு சென்றார். பின்னர் மீண்டும் இங்கு வந்து மணற்தரை என்ற பகுதியில் காணி வாங்கி வீடு கட்டி வசதியாக இருக்கின்றார்.

இவர்கள் மக்களுடைய நலன்களையும் கருத்தில் கொள்ள வேண்டும். இவ்வாறானவர்கள் மக்களுக்குத் தவறான வழி காட்டுதல்களை வழங்கி மக்களை உசுப்பேற்றுகின்றார்கள். இவை ஆரோக்கியமான விடயமல்ல. இதேநேரம் எங்களுக்குப் பயந்தே வெளிநாடு ஓடியதாக அண்மையில் அவர் கூறியிருந்தார்.

இன்று நான் இருக்கின்றேன். ஆனால், அவர் யாருக்குப் பயத்தில் ஓடினாரோ அவர்கள் இன்று இல்லை. அப்படியானால் யாருக்குப் பயந்து அவர் ஓடியிருக்க முடியும்.? அந்தக் கால கட்டத்தில் வெலிக்கடை சிறையில் சிங்களவர்களும், களுத்துறை சிறையில் தமிழர்களாலும் நான் தாக்கப்பட்டேன்.

ஆனால் நானும் திரும்பித் தாக்கினேனே தவிர நாட்டை விட்டு ஓடவில்லை. ஆனால் இந்தக் கைப்பிள்ளை திருகோணமலை மக்களை உசுப்பேற்றி குழப்பினார். அந்த மக்கள் அடிச்சுத் துரத்திய போது ஓடியதை அனைவரும் வீடியோவில் பார்த்திருப்பீர்கள். அவர் கோழை போல் ஓடினார். அவர் திரும்பத் தாக்கியிருக்க வேண்டும். அந்தச் சம்பவத்துக்கு மனம் வருத்துகின்றேன். ஆனால், அவர் மீண்டும் தாக்கியிருக்க வேண்டும். அதற்கு முதுகெலும்பில்லாத தைரியம் இல்லாதவர்கள் இன்று சகட்டுமேனிக்கு ஏதோ பேசுகின்றனர் என்றார்.

## இஸ்ரேல் இனப்படுகொலையில் ஈடுபடுகின்றது! சர்வதேச நீதிமன்றத்தில் தென்னாபிரிக்கா வழக்கு

இஸ்ரேலிற்கு எதிராக தென்னாபிரிக்க சர்வதேச நீதிமன்றத்தில் இனப்படுகொலை குற்றச்சாட்டுகளை சுமத்தியுள்ளது. இனப்படுகொலை தொடர்பான சாசனத்தின் கீழ் தென்னாபிரிக்கா வழக்கு தாக்கல் செய்துள்ளதை ஐசிஜே உறுதி செய்துள்ளது.

இனப்படுகொலை இடம் பெறுவதை தடுக்கவேண்டிய கடப்பாடுள்ளதாக தென்னாபிரிக்கா தெரிவித்துள்ளது. காசா மீதான இஸ்ரேலின் தாக்குதல் காரணமாக சிக்குப்பட்டுள்ள மக்களின் நிலைமை குறித்து ஆழ்ந்த கவலை கொண்டுள்ளதாக தெரிவித்துள்ள தென்னாபிரிக்கா கண்மூடித்தனமான படைபல பிரயோகமும் அப்பகுதியில் வசிக்கும் பொது மக்களை பலவந்தமாக வெளியேற்றுதலும் இடம் பெறுவதாக குறிப்பிட்டுள்ளது. மனித குலத்திற்கு எதிரான குற்றம் யுத்த குற்றங்கள் போன்றவை இடம் பெறுவ தாக தகவல்கள் வெளியாகின்றன இனப் படுகொலை அல்லது அதனுடன் தொடர்புபட்ட குற்றங்கள் என தெரிவிக்க கூடிய சம்பவங்கள் இடம் பெறுவதாகவும் அறிக்கைகள் வெளியாகின்றன என தென்னாபிரிக்கா தெரிவித்துள்ளது. இஸ்ரேல் இந்த குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை என நிராகரித்துள்ளது.

இதேவேளை இரண்டு சிறுவர்கள் உட்பட பாலஸ்தீன ஆண்களை இஸ்ரேலிய இராணுவத்தினர் நிர்வாணமாக்கி தடுத்து வைத்துள்ளதை காண்பிக்கும் வீடியோ வெளியாகியுள்ளது என சிஎன்என் தெரிவித்துள்ளது. இரண்டு சிறுவர்கள் அரை நிர்வாணமாக்கப்பட்ட நிலையில் ஒருவரின் கரத்தை மற்றவர் பிடித்தபடி நடந்து செல்வதை வீடியோ காண்பிப்பதாக தெரிவித்துள்ளது.


தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

Math & Physics Tutoring
(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions, Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12

கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)
சி.இளஞ்செழியன்

Tel: 416-524-0424

# ஈழத்துப் பாடகி கில்மிசாவை சமூகம் ஓவராக தூக்கிப் பிடிக்கிறதா?

சமூகம் ஓவராக தூக்கிப் பிடித்தால் கொஞ்ச நாளில் அது கேலி செய்யப்படும் விடயமாக மாறும் இவள் திறமையானவள். அவள் பெற்ற வெற்றியும் மிகப் பெரியது தான். ஆனால் இது தான் இவளது ஆரம்பம். இனி அவள் தன்னை ஒரு brand ஆக நிலை நிறுத்தி இந்த வெற்றியை தொடர வேண்டும். இலங்கையில் ஒரு தொழில் முறை பாடகியாக இருந்து வருமானம் பெறுவது அவ்வளவு இலகுவானதல்ல.

அவள் இந்தியாவையும் புலம் பெயர் தேசத்தையும் நம்பியே பாடகியாக நல்ல வருமானம் பெறும் நிலைக்குப் போகலாம். குடும்பத்தினரின் அனுமதி இன்றி அவளை கடத்தி சென்றது போல இந்த நிகழ்வுகளை செய்ததாக அவளது உறவினர் ஒருவரே பதிவு போட்டதால் இதைத் துணிந்து எழுதுகிறேன். சிலரின் சுய லாபத்திற்காக ஒரு திறமையான பிள்ளையின் எதிர்காலத்தை பாழாக்கி விடாதீர்கள்.



இந்த நிகழ்வுகள் அவளுக்கு எதிராக கேலிகளை மட்டும் உருவாக்காது சிலரால் தொழில்முறை ரீதியான அரசியல் அழுத்தங்களை உருவாக்கி அவளின் எதிர்கால வளர்ச்சியை அடக்கி விடுமளவுக்கு செல்ல முடியும்.

அவள் இன்னும் சிறுமி. அவளுக்கு அப்படியான அழுத்தங்களை எதிர் கொள்ளும் வயது இல்லை. முக்கியமாக அவள் மீது ஓவராக ஈழ அடையாளத்தை திணிப்பது அவளது branding யைப் பாதுகாக்கும். அவள் முக்கியமாக தன் பேஸ்புக் அட்மின் பதிவுகள் போடுவதை நிறுத்த வேண்டும்.

கொஞ்ச நாள் இந்த சலசலப்புக்களை குறைத்து தன் திறமையை வெளிக்காட்டும் வாய்ப்புக்களைத் தேடி தன்னை தொழில் முறை பாடகியாக நிலை நிறுத்த கவனம் செலுத்த வேண்டும். இந்த கொண்டாட்டம் எல்லாம் சில நாட்கள் தான். பிறகு எல்லாரும் மறந்து விடுவார்கள். இப்போது இருந்தே வாய்ப்புக்களை தேடி தன்னை நிலை நிறுத்த தவறினால் சில வருடங்களில் எவ்வளவு கஷ்டப் பட்டாலும் நல்ல வாய்ப்புக்கள் வராது. சின்ன வயதில் வரும் அதீத புகழ்ச்சியின் பெரிய பிரச்சினை அதை தக்க வைக்காமல் போனால் பெரியவர் ஆனதும் அது பாரிய அழுத்தமாக மாறும். ஆகவே அவள் பெற்றோர் கவனமாக இந்தப் பிள்ளையை வழி காட்ட வேண்டும்.

இனியாவது புதினம் பார்க்கவும், செல்ஃபி எடுத்து போடவும் மட்டும் அவளை மற்ற ஆட்கள் பயன்படுத்தாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். இது அவள் மீதான விமர்சனமல்ல. அவள் சிறுமி. அவள் இன்னும் வெற்றி பெற வேண்டும் என்ற ஆசையில் சொல்கிறேன். எதிர்காலத்தில் அவளை ஒரு சித்ரா ஜானகி ஷ்ரேயா கோஷல் போன்ற ஒரு பாடகியாக பார்க்க வேண்டும் என்ற ஆசையில் எழுதுகிறேன்.

(முகநூலில் இருந்து)

# செஞ்சோலையில் இருந்து 3 பிள்ளைகள் பல்கலைக்கழகத்திற்கு தெரிவானார்கள்

கிளிநொச்சியில் இருக்கும் எமது செஞ்சோலைச் சிறுவர் இல்லத்தில் இருந்து மூன்று பிள்ளைகள் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகியுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

கிளிநொச்சி திருவையாறு மகா வித்தியாலய 2022 உயர் தர கலைப்பிரிவு மாணவர்களான செல்வன். பரமநாதன்.ரூபன்

உடற்தொழிலியல் கற்கைநெறி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் செல்வி பிரவினா பாலசுப்ரமணிம் இசைத்துறை -யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்










செல்வி.சங்கீதா.பரமசிவம் - நாடகமும் அரங்கியலும் -கிழக்குப் பல்கலைக்கழகம் ஆகிய பல்கலைக் கழகத்திற்குத் தெரிவாகியுள்ளனர். வாழ்த்துக்கள்!




# இந்தியாவிடம் செல்லுதல்

இந்தியாவை நோக்கிச் செல்ல வேண்டும் புது டில்லியில் 'லொபி'யில் ஈடுபட வேண்டும் என்னும் கருத்து தமிழ் தரப்புகள் மத்தியில் முன்னரை விடவும் அதிகரித்திருக்கின்றது. கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை தவிர அனைத்து தமிழ்த் தேசிய கட்சிகளும் இந்த விடயத்தில் ஒரு கருத்தில் இருகின்றன. தமிழரசு கட்சியின் அடுத்த தலைமைக்கான போட்டியில் ஈடுபட்டுவரும் சிவஞானம் சிறீதரன், தனது கட்சியின் தலைமையின் தவறுகளை ஒப்புக்கொள்கின்றார்.

அதாவது 2015இல் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து சம்பந்தன் முன்னெடுத்த நகர்வுகள் தோல்வியில் முடிவுற்றன எனவும் வெறுமனே இலங்கையுடன் மட்டும் பேசுவதன் மூலம் பிரச்னைகளை தீர்க்க முடியுமென்று நம்பியது தவறு - இந்தியாவிடம் சென்றிருக்க வேண்டும் என்றும் தெரிவித்திருக்கின்றார்.

2009இற்கு பின்னரான ஈழத் தமிழர் அரசியல் என்பது அடிப்படையிலேயே வெளித்தரப்புகள் மீதான எதிர்பார்ப்புகளாகவே நகர்த்தப்பட்டன. ஒரு பலவீனமான சூழலில் அவ்வாறான எதிர்பார்ப்பைத் தான் கொண்டிருக்கவும் முடியும். ஆனால், அந்த வெளித்தரப்புகளை எவ்வாறு புரிந்து கொள்ள வேண்டும் என்பதில், தெளிவான புரிதல் தமிழர் தரப்புகள் மத்தியில் இருந்திருக்கவில்லை.

குறிப்பாக இலங்கைமீதான மேற்குலக அழுத்தங்களால், மாற்றங்கள் ஏற்படும் என்னும் எதிர்பார்ப்பே மேலோங்கியிருந்தது. ஜெனிவாவுக்கு செல்லுதல் என்பதே பிரதான தேசிய பணியாக இருந்தது. ஆனால் இவ்வாறு உலகம் சுற்றிய தன் மூலம், அரசியல் தீர்வு நோக்கிய பயணத்தில் ஒரு சிறிய முன்னேற்றத்தைக் கூட அடைய முடியவில்லை.

2015இல் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தை தொடர்ந்து மைத்திரி ரணில் அரசாங்கத்தின் ஊடாக புதிய அரசியல் யாப்பொன்றை கொண்டு வர முடியுமென்று கூறி காலம் விரயம் செய்யப்பட்டது. அந்தச் சந்தர்ப்பத்தில் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் விளைவான 13ஆவது திருத்தச் சட்டத்தை கையிலெடுப்பது தான் சரியானது என்று பலராலும் சுட்டிக் காட்டப்பட்ட போதும் சம்பந்தன் தலைமையிலான அணியினர் அதனை கருத்தில் கொள்ளவில்லை.

ஆனால் அந்த அணியில் இருந்தவரே இன்று, தாங்கள் விடயங்களை சரியாகக் கையாளவில்லை என்பதை ஒப்புக் கொண்டிருக்கின்றார். உலகமெல்லாம் சுற்றி வந்தாலும் கூட இறுதியில் இந்தியாவின் ஆதரவில்லை என்றால், முன்னோக்கிச் செல்ல முடியாது என்னும் மறந்து போன உண்மையை ஏற்றுக் கொள்கின்றார்.

2010இலிருந்து ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவைக்கும் அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் கனடா என்று உலகம் சுற்றுவதை தங்களின் இராஜதந்திர பணியாகக் காண்பித்துக் கொண்டிருந்த சூழலில் தான் 2022இல் அந்த நகர்வில் ஓர் உடைவு ஏற்பட்டது. இந்தியாவை நோக்கிச் செல்ல வேண்டும் என்னும் உண்மையை அனைவரும் உணரத் தொடங்கினர்.

முன்னாள் விடுதலை இயக்கங்களில் ஒன்றான ரெலோ இதற்கான பிள்ளையார் சுழியை இட்டது. ஆறு தமிழ் கட்சிகள் இணைந்து இந்தியப் பிரதமருக்குக் கடிதம் அனுப்புவதன் மூலம் இந்தியாவின் உதவி கோரப்பட்டது. யுத்தத்துக்குப் பின்னரான பத்தாண்டுகளில் இந்தியாவை நோக்கி செல்லுதல் என்னும் விடயத்தில் ஏற்பட்ட உடன்பாடு இதுதான்.

ஆனால் இந்தியாவை நோக்கி எவ்வாறு செல்ல வேண்டும் என்பதில் தமிழ்தரப்புகள் இன்னும் தெளிவைப் பெற வேண்டியிருக்கின்றது. இந்தியா ஒன்று தான் ஈழத் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை வலியுறுத்தி வரும் ஒரேயொரு நாடு. அதன் அடிபபடையாக இந்திய இலங்கை ஒப்பந்ததத்தின் விளைவான 13ஆவது திருத்தச் சட்டமே இருக்கின்றது.

13ஆவது திருத்தச்சட்டம் என்பது கருங்கல் பாறையல்ல அதிலிருந்து முன்னோக்கி நகரமுடியும். ஆனால், முதலில் இருப்பதை உச்ச பட்சமாகப் பயன்படுத்திக் கொண்டு தான் நகர முடியும். இன்றைய சூழலில் தான் அதற்கான உதவியைத் தான் இந்தியா விடம் எதிர்பார்க்க முடியும். அதே வேளை இந்தியாவின் நலன்கள் தொடர்பிலும் விசுவாசமும் பற்றும் கொண்ட தரப்பாகவும் தமிழ்த் தேசிய கட்சிகள் தங்களை அடையாளப்படுத்த வேண்டும்.

# உலகத்தமிழர் பேரவையின் இமாலய பிரகடன முயற்சியை கடுமையாகக் கண்டிக்கும் பிரம்டன் மேயர் பட்ரிக் பிரவுன்




உலக தமிழ்பேரவையும் கனேடிய தமிழ் காங்கிரசும் தமிழ் மக்களின் அபிலாசைகளை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் இலங்கையின் யுத்த குற்றவாளிகளை காப்பாற்றும் யோசனையொன்றை சமர்ப்பித்துள்ளதாக கனடாவின் பிரம்டன் மேயர் பட்ரிக் பிரவுன் தெரிவித்துள்ளார் இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

இலங்கையில் இடம்பெறும் இனப்படுகொலையிலிருந்து தமிழர்கள் தப்பியோடி வந்துள்ளனர். 2009இல் இனப்படுகொலை உச்சக் கட்டத்தை அடைந்த காலம் முதல் தமிழ் மக்களிற்கு இழைக்கப்பட்ட மிகவும் கொடுரமான குற்றங்களிற்காக நீதியும் பொறுப்புக்கூறலும் அவசியம் என நான் வலியுறுத்தி வந்துள்ளேன்.

இலங்கையில் நீதி பொறுப்புக்கூறல் இன்றி அமைதி சமாதானம் சாத்தியமில்லை. ஐக்கியநாடுகள் மனிதஉரிமை பேரவை ஆதாரங்களை சேகரித்து வருவதுடன் இலங்கையின் யுத்த குற்றவாளிகளிற்கு எதிரான விசாரணைகள் உட்பட சாத்தியமான மூலோபாயங்களை முன்வைக்கவுள்ளது.

கனடாவின் பிரம்டன் நகரமும் கனடாவின் அனைத்து நிர்வாகங்களும் தமிழர்கள் இனப்படுகொலைக்குள்ளானார்கள் என்பதை ஏற்றுக்கொண்டுள்ளன. எனினும் உலகதமிழர் பேரவை கனேடிய தமிழ் காங்கிரசின் ஆலோசனை குழுவின்உறுப்பினர் ஒருவருடன் இணைந்து தமிழ் மக்களின் அபிலாசைகளை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் இலங்கையின் யுத்த குற்றவாளிகளை காப்பாற்றும் யோசனையொன்றை சமர்ப்பித்துள்ளனர்.

இது நீதி பொறுப்புக்கூறல் என்ற இலக்கில் ஒரு அடி பின்னோக்கிய நடவடிக்கையாகும். தமிழ் மக்களிற்கு எதிரான மிகமோசமான குற்றங்களிற்காக கனடாவில் தடை செய்யப்பட்டுள்ள யுத்த குற்றவாளியும் முன்னாள் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்சவுடன் கனேடிய தமிழ் காங்கிரஸ் உறுப்பினர் படமெடுத்துக் கொண்டமை அதிர்ச்சியை ஏற்படுத்துகின்றது.

உலகத்தமிழர் பேரவை கனேடிய தமிழ் காங்கிரசின் இந்த நடவடிக்கைகளை நான் கடுமையான கண்டிக்கின்றேன், கனேடிய தமிழ் அமைப்புகளும் கனடா அரசாங்கமும் தமிழ் மக்களின் நீதி பொறுப்புக்கூறலிற்கு தீர்வை காண்பதில் உரிய தார்மீகநிலைப்பாட்டை தெரிவு செய்ய வேண்டும் என எதிர்பார்க்கின்றேன் என்றார்.

# உலகில் வேலை வாய்ப்பு தேடுவோரின் கனவு நாடாக முதல் இடத்தில் கனடா



பிரித்தானிய நிறுவனமான Givetastic இன் சமீபத்திய ஆய்வின்படி வேலை தேடும் இடங்களில் உலகளாவிய ரீதியில் கனடா முன்னணியில் இருக்கின்றது. வேலைகள் மற்றும் 'வேலை' போன்ற திறவுச் சொற்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளும் சராசரி மாதாந்த தேடல் அளவை பகுப்பாய்வு செய்வதன் மூலமும் தேவையான இடங்களில் மொழி பெயர்ப்பைப் பயன்படுத்துவதன் மூலமும், Givetastic ஒவ்வொரு நாட்டிற்கும் வெளிநாட்டில் வேலை செய்வதற்கான கனவு இடங்களைத் தீர்மானித்தது.

164 நாடுகளில் உள்ள தனிநபர்களை ஆய்வு செய்து, கனடாவின் முறையீட்டை அதன் வலுவான சுகாதாரம், பணியாளர் நலன்கள் மற்றும் துடிப்பான வேலைச் சந்தை ஆகியவற்றால் குறிப்பிடத்தக்க வகையில் சிறந்து விளங்குகின்றது.

56 நாடுகள் கனடாவைத் தங்களின் முதன்மைத் தேர்வாக (உலக நாடுகளில் 34.1வீதம்) மதிப்பிட்டுள்ளன, அதன்படி கனடா முக்கிய பணியிடமையமாக விளங்குகிறது.

Givetastic இன் ஆய்வின்படி சிறந்த கனவு பணியிடங்களாக கனடா (56 நாடுகளில் சிறந்த தேர்வு) ஜேர்மனி (13 நாடுகள்) கத்தார் (11 நாடுகள்) பிரித்தானியா (8 நாடுகள்) சுவிட்சர்லாந்து, அவுஸ்ரேலியா (தலா 7 நாடுகள்) ஸ்பெயின் அமெரிக்கா (தலா 6 நாடுகள்) மாலைதீவு (5 நாடுகள்) நைகர், போர்த்துக்கல் (தலா 4 நாடுகள்)

Givetastic வேலை தொடர்பான காரணங்களுக்காக குடிபெயர்வதற்கான மிகவும் பிரபலமான நகரங்கள், மாநிலங்கள் மற்றும் பிராந்தியங்களைக் கண்டறிய அதே முறையை மேற்கொண்டது.

கூகுள் தேடல் அளவின்படி, டுபாய் 150 நாடுகளில் 69 நாடுகளில் தேடுதலில் முதலிடத்தில் இருந்ததால், வேலைக்காகப் புலம் பெயர்வதற்கு மிகவும் பிரபலமான நகரங்களில் முதலிடத்தில் உள்ளது. இருப்பினும், கியுபெக் டுபாயின் நெருங்கிய போட்டியாளராக இருந்தது.

கொலம்பியா, மெக்சிக்கோ, மொராக்கோ மற்றும் கமரூன் போன்ற நாடுகளில் இருந்து 150 நாடுகளில் 28 நாடுகளில் கியுபெக் முதலிடத்தில் உள்ளது, இது மாகாணத்தின் உலகளாவிய கவர்ச்சியை வலியுறுத்துகிறது

Givetastic ஆராய்ச்சியின்படி, பங்களாதேஷ், சிலி, ஈக்வடார், கென்யா, நைஜீரியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தென் கொரியா மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் கனடா ஒரு சிறந்த பணியிடமாக இருந்தது. பல்வேறு காரணங்களால் வெளிநாட்டினருக்கு கனடா ஒரு பிரபலமான வேலை மற்றும் குடியேற்ற இடமாகும். முதலாவதாக, கனடா உயர்ந்த வாழ்க்கைத் தரத்தைக் கொண்டுள்ளது, உலகளாவிய சுகாதாரம் மற்றும் உலகத் தரம் வாய்ந்த கல்வி நிறுவனங்களுக்கான அணுகலை வழங்குகிறது.

கனடா ஒரு பாதுகாப்பான, அமைதியான நாடு, குறைந்த குற்ற விகிதத்தைக் கொண்டுள்ளது, இது புலம் பெயர்ந்தோர் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு வரவேற்கத்தக்க இடமாக அமைகிறது.

மேலும், கனடா மிகவும் மாறுபட்ட நாடுகளில் ஒன்றாகும். இது அனைத்து கலாசாரங்கள் மற்றும் மதங்களுக்கு மதிப்பளித்து, கனேடிய சமுதாயத்தில் குடியேறி ஒருங்கிணைக்க மற்றும் அவர்களின் புதிய சமூகங்களை தழுவுவதை எளிதாக்குகிறது.

பல தரப்பட்ட பணியாளர்களை வளர்ப்பதற்கும், குடியேற்ற ஓட்டங்கள், அனுசரணை வாய்ப்புகள் மற்றும் வேலை மற்றும் கல்வி அனுமதி திட்டங்களை வழங்குவதன் மூலம் சமூக பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்வதற்கும் நாடு அர்ப்பணிப்புடன் உள்ளது.

கனடாவில் தற்காலிக வெளிநாட்டு பணியாளர் திட்டம் (TSWP) மற்றும் மாகாண நியமனத் திட்டங்கள் (PNP) போன்ற முக்கிய குடியேற்ற திட்டங்கள் உள்ளன, அவை தகுதியான வெளிநாட்டினருக்கு நிரந்தர வதிவிடத்தை வழங்குகின்றன.

ஒரு வருடத்திலும் இல்லாத அளவுக்கு 2022 ஆம் ஆண்டில், கனடா 437,000க்கும் மேற்பட்ட வெளிநாட்டினருக்கு நிரந்தர வதிவிடத்தை வழங்கியது.

நவம்பர் 1, 2023 அன்று, குடிவரவு, அகதிகள் மற்றும் குடியுரிமை (IRCC) 2024 -2026க்கான கனேடிய அரசாங்கத்தின் குடிவரவு நிலைகள் திட்டத்தை வெளியிட்டது.

கனடா 2024இல் 485,000 புதிய நிரந்தர குடியிருப்பாளர்களையும், 2025 மற்றும் 2026இல் அந்த எண்ணிக்கையை 500,000 வரை அதிகரிக்க தீர்மானித்துள்ளது. இந்தத் திட்டம் பொருளாதார வளர்ச்சிக்கு முன்னுரிமை அளிக்கிறது மற்றும் குடும்ப மறு ஒருங்கிணைப்பை ஆதரிக்கிறது, அதே நேரத்தில் மனிதாபிமான நெருக்கடிகளுக்கு பதிலளிக்கிறது மற்றும் சமீபத்திய ஆண்டுகளில் குடியேற்றத்தின் விரைவான வளர்ச்சியை அங்கீகரிக்கிறது.

# இலங்கைக்கு 14 மில்லியனை தாண்டிய சுற்றுலா பயணிகளின் வருகை!

2023 ஆம் ஆண்டில் 1,487,303 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. இவர்களில் 210,352 பேர் கடந்த டிசம்பர் மாதத்தில் இலங்கை வந்துள்ளதாக அந்த சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை கடந்த நவம்பர் மாதம் 151,496 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்திருந்தனர். 2022 ஆம் ஆண்டில், 719,978 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்திருந்தனர். இதன்படி 2022ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2023ஆம் ஆண்டு இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 106.6வீதமாக வளர்ச்சியடைந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

சுற்றுலா பயணிகளின் வருகையை அதிகரிப்பதற்கு சுற்றுலாத்துறை அபிவிருத்தி அமைச்சு பல விசேட செயற்திட்டங்களை அறிமுகப்படுத்தியது. பல நாடுகளுக்கு விசேட சலுகைகள் வழங்கப்பட்டன. இதற்கமைய இந்த ஆண்டு சுமார் 20 இலட்சம் சுற்றுலா பயணிகளை நாட்டுக்கு அழைத்து வர சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை எதிர்பார்த்துள்ளது.

# இயக்க அரசியலில் இயைந்து இணக்க அரசியலில் பிணைந்த தமிழரசு இன்று தள்ளாடுகிறது!

கட்டுரையாளர்:
கனடாவில் இருந்து
- பனங்காட்டான் -

தை பிறந்தால் வழி பிறக்கும் என்று வருடா வருடம் சொல்லுவது வழக்கமாகி விட்டது. தமிழர் வாழ்வில் எந்தவொரு தை மாதமும் அவர்களுக்கான வழியைப் பெற்றுத் தந்ததாக இல்லை. அதற்கான வழியைக் காட்டியதாகவும் காணப்படவில்லை.

மாறாக, தை மாதம் ஈழத்தமிழர் வாழ்வில் பல சவால்களையும் நெருக்கடிகளையும் ஏற்படுத்தியுள்ளது. யாழ்ப்பாணம் முற்றவெளிக்கு முன்னால் காட்சி தரும் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலைகளின் சின்னம் தை மாதத்தை நினைவு கூரும் முக்கியமான அடையாளம்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பிலிருந்து பெளியேறும் நிலைக்குத் தள்ளப்பட்ட ரெலோவும் புளொட்டும் 2023 தை மாதத்தில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பை உருவாக்கின. ஒரு வருடத்துக்குள் இவர்களும் உருப்படியாக எதனையும் செய்ததாக இல்லை.



ரெலோவையும் புளொட்டையும் வெளியேறும் நிலைக்குத் தள்ளிய தமிழரசுக் கட்சி தனிப்பெரும் கட்சியாக எதையாவது சாதிக்குமா என்று பார்த்தால், கிடைத்திருப்பது தலைமைக்கான நீயா நானா போட்டி, வடக்கையும் கிழக்கையும் அதிகார ரீதியாக பிரிக்கும் நிலைமை, உள்வீட்டுக் குழறுபடிகள் அல்லது கழுத்தறுப்புகள் என்பவைதான் எஞ்சியுள்ளன.

பிறக்கப் போகும் தை மாதம் கட்சியின் புதிய தலைவர் தெரிவு நடைபெற தீர்மானிக்கப்பட்ட காலம். முதன்முறையாக இதற்கும் போட்டி அதுவும் மும்முனைப் போட்டி. எவரும் விட்டுக் கொடுப்பதாக இதுவரை இல்லை. போட்டியிடும் மூவருமே 2010ம் ஆண்டில் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களானவர்கள்.

இம் மூவரில் சிறீதரனும், யோகேஸ்வரனும் முறையே யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மாவட்டங்களில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர்கள். சுமந்திரன் கொழும்பிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு நாடாளுமன்ற உறுப்பினராக நியமனம் ஆனவர். இவர் முழுக்க முழுக்க கட்சியின் மூத்த தலைவர் சம்பந்தனின் தெரிவு.

கட்சியின் முன்னேற்றம், வளர்ச்சி, எதிர்கால நோக்கு என நல்நோக்குடன் சம்பந்தனால் இறக்கப்பட்ட மூவரில் இன்று எவருமே அவருக்கு விசுவாசமாக இல்லை. வடக்கின் முதலமைச்சராயிருந்த விக்கினேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், திருமலை மாவட்டத்தில் கடந்த தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியடைந்த ச.குகதாசன் ஆகியோரே இவர்கள்.

இவர்களில் முதல் இருவரும் கொழும்பிலிருந்தும், மூன்றாமவரான குகதாசன் கனடாவிலிருந்தும் இறக்கப்பட்டவர்கள். விக்கினேஸ்வரன் நேர்மையாக வெளியேறி புதிய கட்சியை உருவாக்கி நாடாளுமன்ற உறுப்பினராகி விட்டார்.

ஆனால், மற்றைய இருவரும் இன்று சம்பந்தனின் இருப்புக்கும் தலைமைக்கும் உள்ளிருந்து குழி தோண்டிக் கொண்டிருப்பவர்கள்.

தை மாதத்தில் இடம் பெறவிருக்கும் தமிழரசு தலைவர் தெரிவுப் போட்டிக்கு தமக்கு சாதகமான வகையில் சில கட்சிக்கிளைகளின் உறுப்பினர் தெரிவை சுமந்திரன் நடத்தியமையும், இதற்கு உடந்தையாக திருமலை மாவட்டத்தில் குகதாசன் செயற்பட்டமையும் ஏற்கனவே வெளிச்சத்துக்கு வந்த விடயங்கள்.

திருமலை மாவட்ட வட்டார, தொகுதிக் கிளைகளுக்கான தெரிவின் போது தமது



ஆதரவாளர்கள் புறக்கணிக்கப்பட்டதாக கட்சியின் மூத்த தலைவரும் திருமலை நாடாளுமன்ற உறுப்பினருமான சம்பந்தன் பகிரங்கமாக குற்றஞ்சாட்டும் அளவுக்கு முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன. திருமலைக் கிளைகளை மீள புனரமைக்காமல் (கவனிக்கவும் மீள புனரமைக் காமல்) தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டை நடத்த வேண்டாமென கட்சியின் மூத்த தலைவர் வேண்டுமளவுக்கு அங்கு ஊழல் இடம் பெற்றுள்ளது என்பது இதனால் தெரிய வந்துள்ளது.

இந்தச் சர்ச்சைக்கு இறுதி முடிவு காண்பதற்காக தை மாதம் 10ம் திகதி சம்பந்தனின் வீட்டில் அரசியல் குழுவின் முக்கிய கூட்டம் இடம் பெறவுள்ளதாக ஊடகச் செய்திகள் அறியத் தருகின்றன. இது தொடர்பாக யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் ஈழநாடு தினசரி ,ந்த மாதம் 29ம் திகதி வெளியிட்ட முதற் பக்க தலைப்புச் செய்தி பலராலும் முணுமுணுக்கப்பட்டு வந்த ஒரு விடயத்தை வெளிப்படுத்தியுள்ளது. அந்தப் பந்தி பின்வருமாறு:

திருகோணமலை மாவட்டத்திலுள்ள கட்சியின் வட்டார, தொகுதிக் கிளைகளுக்கான தெரிவில் கனடாப் பணம் தாராளமாக விளையாடி முறையற்ற விதமாக நியமனங்கள் நடந்ததாக எழுந்த குற்றச் சாட்டுகளையடுத்து, இரா.சம்பந்தனைத் தவிர்த்து குகதாசனை முன்னிறுத்த ஒரு தரப்பு முற்படுவதையடுத்து கட்சியின் தேசிய மாநாடு விவகாரம் சர்ச்சையானது' என்று ஈழநாடு செய்தி தெரிவிக்கிறது.

குகதாசன் கனடாவில் இருந்தபோதே இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெற்றதாகவும் கனடாவிலுள்ள கட்சியின் அமைப்பொன்று இவ்விடயத்தில் செயற்பட்டு வந்ததாகவும் பேசப்பட்டது அனைவரும் அறிந்த விடயம். கனடாவில் இவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டமொன்றிலிருந்து சுமந்திரன் பொது மக்களின் எதிர்ப்பையடுத்து காவற்துறையினரின் பாதுகாப்புடன் வெளியேற்றப்பட்ட நிகழ்வு போன்ற பலவற்றை இதற்கு இணைந்ததாகக் குறிப்பிடலாம்.

இவ்வாறான பின்னணியிலேயே இறுதியாக சம்பந்தப்பட்ட சம்பந்தன் களத்தில் இறங்கியுள்ளார் போலத் தெரிகிறது. திருமலைக் கிளைகளை மீளப் புனரமைக்காமல் அதாவது சுமந்திரனுக்கு இசைவாக இயங்கக் கூடியவாறு குகதாசனால் நடத்தப்பட்ட அங்கத்தவர் தெரிவு சீர்கேட்டை நிவர்த்தி செய்யும் வரை, தேசிய மாநாட்டை நடத்த வேண்டாமென கடித மூலம் ஏற்கனவே விடுத்த வேண்டுகோளின் அடிப்படையில் அரசி



யல் குழுக் கூட்டத்தை ஜனவரி பத்தாம் திகதி தமது இல்லத்தில் நடத்த சம்பந்தன் அதிரடியாக நடவடிக்கை எடுத்துள்ளார்.

தமிழரசுக் கட்சியின் கடந்த கால செயற்பாடுகள் அனைத்தும் சரியானவையாக ஏற்க முடியாத நிலையிலும், தனித்துவமான ஒரு தலைமையாக இக்கட்சி வடக்கு கிழக்கு மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு வந்தது. இதன் செயற்பாட்டின் பலவீனத்தால் கடந்த தேர்தலில் ஆறு உறுப்பினர்களை மட்டுமே தமிழரசால் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்ய முடிந்தது.

யாழ்ப்பாணத்தில் சிவஞானம் சிறீதரனுடன் இணைந்திருக்கா விட்டால் சுமந்திரனால் வெற்றி பெறுவது கேள்விக்குறியாக இருந்திருக்கும். முன்னர் மகிந்த அணியினரின் கட்சியில் மட்டக்களப்பில் போட்டியிட்ட சாணக்கியனை தமிழரசுக் கட்சியில் இணைத்ததும் சுமந்திரன் தான். இதனால் மட்டக்களப்பின் தமிழரசுப் பிரமுகர்கள் பலரும் முன்னாள் எம்.பிக்களாயினர்.

சுமந்திரனின் தந்திர முயற்சியால் கலையரசன் தேசிய பட்டியல் ஊடாக தெரிவாகி அம்பாறை மாவட்டத்துக்கு நியமனமானார். திருமலை எம்.பியான சம்பந்தனை விட குகதாசனே வேண்டப்பட்டவராக இருப்பதை அண்மையில் சம்பந்தன் பதவி விலக வேண்டுமென்று சுமந்திரன் விடுத்த வேண்டுகோளினூடாக நோக்கலாம்.

இப்போது அதே குகதாசன் தம்மை திருமலை அரசியலுக்கு அழைத்து வந்த சம்பந்தனுக்கு எதிராக சுமந்திரனுடன் சேர்ந்து முன்னெடுக்கும் அனைத்து செயற்பாடுகளினால் கட்சியின் தேசிய மாநாட்டையும் புதிய தலைவர் தெரிவையும் பின்னகர்த்த வேண்டிய நிலைமை வந்துள்ளது.

நிலைமை கட்டுப்பாட்டை மீறுவதற்கு முன்னர் சம்பந்தன் நடவடிக்கைகளை எடுக்க ஆரம்பித்திருப்பது போலத் தெரிகிறது. பிரச்சனை கையை விட்டுப் போவதற்கு முன்னர் நிலைமையைச் சீராக்க வேண்டுமானால் இவருக்கு சில தெரிவுகள் உண்டு.

தமிழரசுக் கட்சியை பிளவுபடுத்தக் கூடியதாக மாறியிருக்கும் அதற்கான தலைவர் பதவிக்கான போட்டியை நிறுத்த வேண்டும். அதற்கான வழி தலைவர் தெரிவை காலவரையின்றி ஒத்தி வைக்கலாம். முடிந்தால் அடுத்த பொதுத் தேர்தல்வரை இதனை பின் போடலாம். அது வரை காலத்துக்கும் தற்போதைய தலைவர் மாவை சேனாதிராஜாவை அப்பதவியில் தொடர அனுமதிக்கலாம்.

தமது கட்டுப்பாட்டுக்குள் மாவை சேனாதிராஜா எப்போதும் இருப்பார் என்ற நம்பிக்கை சம்பந்தனுக்கு இருப்பதால் இது சாத்தியப்படக்கூடும்.

இது தொடர்பாக கொழும்பிலுள்ள தமிழரசுக் கட்சியின் பிரதான ஆதரவாளர் ஒருவருடன் உரையாடியபோது அவர் ஒரு தகவலைத் தெரிவித்தார். எவ்வகையிலாவது தலைவர் தெரிவுப் போட்டியை நிறுத்துவதற்கு சம்பந்தன் நடவடிக்கை எடுப்பாரென்பது சுமந்திரனுக்கு ஏற்கனவே தெரியுமென்றும், அதனாலேயே இவ்வேளையில் நாட்டை விட்டு வெளியே சென்றுள்ளாரென்றும் அவர் தெரிவித்தது உண்மையாக இருக்கலாம்.

**தமிழ் மக்களை இனி ஆண்டவன் தான் காப்பாற்ற வேண்டுமென எத்தனையோ வருடங்களுக்கு முன்னர் தந்தை செல்வநாயகம் அவர்கள் எடுத்துக்கூறியது, இப்போது அவர் உருவாக்கி வழி நடத்திய தமிழரசுக் கட்சிக்கே பொருத்தமாகியுள்ளது.**

அண்மையில், டான் தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் தலைமைப் பதவி வேட்பாளர்களில் ஒருவரான சிவஞானம் சிறீதரனும் ஒரு கருத்தை வெளியிட்டிருந்தார். அரசியல் குழுக் கூட்டத்தின் போது சில முடிவுகள் (மாற்றங்கள்) ஏற்படலாமென சைகை காட்டியிருந்தார். இதிலிருந்து தெரிய வருவது என்னவெனில் சிறீதரனிடம் கட்சித் தலைவர் பதவிக்கான தேர்தல் இடம் பெறுமென்ற நம்பிக்கை முழுமையாக இருக்கவில்லை.

ஏற்கனவே சில வாரங்களுக்கு முன்னர் இப்பத்தியில் குறிப்பிட்டது போன்று புதிய தலைவர் பதவியை கிழக்குக்கு வழங்கி செயலாளர் பதவியை வடக்குக்கு கொடுத்தால் கிழக்கு மாகாண கட்சி ஆதரவாளர்கள் திருப்தி அடைவார்கள்.

2000ல் இயக்க அரசியலுடன் இயைந்து சென்று, பதினைந்து ஆண்டுகளின் பின்னர் சிங்கள இணக்க அரசியலுடன் இணைந்த தமிழரசுக் கட்சிக்கு ஏமாற்றமே கிடைத்தது. அதிலிருந்து விடுபட்டு கட்டத்துக்குச் செல்ல முடியாத தள்ளாட்டத்தில் கட்சி திண்டாடுகிறது.

தமிழ் மக்களை இனி ஆண்டவன் தான் காப்பாற்ற வேண்டுமென எத்தனையோ வருடங்களுக்கு முன்னர் தந்தை செல்வநாயகம் அவர்கள் எடுத்துக் கூறியது, இப்போது அவர் உருவாக்கி வழி நடத்திய தமிழரசுக் கட்சிக்கே பொருத்தமாகியுள்ளது.

# 13வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! ஜனவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

13 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 13 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள்.

இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

"தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

30 டிசம்பர் 2023 முதல் 05 ஜனவரி 2024 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 13வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 31வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சுப்பர் பொன்னுத்துரை
### திருமதி நாகமுத்து பொன்னுத்துரை

நயினாதீவு 3ம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்களான திரு சுப்பர் பொன்னுத்துரை திருமதி நாகமுத்து பொன்னுத்துரை இணையர்களது 31வது ஆண்டு நினைவு நாள் 01 ஜனவரி 2024 திங்கட்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னார்களது குடும்பத்தினர் அவர்களது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சுப்பர் பொன்னுத்துரை திருமதி நாகமுத்து பொன்னுத்துரை ஆகியோரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 46வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சின்னப்பு நல்லையா

யாழ்ப்பாணம் ஊரெழு கிழக்கு ஊரெழுவைச் சேர்ந்த அமரர் திரு சின்னப்பு நல்லையா அவர்களது 46வது ஆண்டு நினைவு நாள் 29 டிசம்பர் 2023 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் திரு சின்னப்பு நல்லையா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 4வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி பரஞ்சோதி சிவானந்தன்

கட்டுவன் தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி பரஞ்சோதி சிவானந்தன் அவர்களின் நான்காவது ஆண்டு நினைவு நாள் 01 ஜனவரி 2024 திங்கட்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி பரஞ்சோதி சிவானந்தன் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து செஞ்சோலை இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 30வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு கந்தையா நன்னித்தம்பி

மயிலிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த திரு கந்தையா நன்னித்தம்பி அவர்களது முப்பதாவது ஆண்டு நினைவு நாள் 31 டிசம்பர் 2023 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் திரு கந்தையா நன்னித்தம்பி அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 45வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு கந்தையா சுப்பிரமணியம்

புங்குடுதீவு 9ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த பெல்மதுளை பிரபல வர்த்தகர் திரு கந்தையா சுப்பிரமணியம் அவர்களது நாற்பதாவது ஆண்டு நினைவு நாள் 30 டிசம்பர் 2023 சனிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் திரு கந்தையா சுப்பிரமணியம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 5வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி திருவானந்தநாயகி தவராஜா

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி திருவானந்தநாயகி (சாரதா) தவராஜா அவர்களது ஐந்தாவது ஆண்டு நினைவு நாள் 28 டிசம்பர் 2023 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி திருவானந்தநாயகி தவராஜா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 7வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு டானியல் எபநேசர் சிட்னி சாமுவேல்
### திருமதி றெஜினா எலிசபெத் சாமுவேல்

கொழும்பைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு டானியல் எபநேசர் சிட்னி சாமுவேல் அவர்களது 7வது ஆண்டு நினைவு நாளையொட்டியும் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் மொன்றியல் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி றெஜினா எலிசபெத் சாமுவேல் அவர்களது 5வது ஆண்டு நினைவு நாளையொட்டியும் 01 ஜனவரி 2024 திகதி திங்கட்கிழமை அன்னாரது குடும்பத்தினர் அவர்களது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். இணையர்கள் இருவரதும் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் ஆகியோருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



30 டிசம்பர் 2023 சனிக்கிழமை புங்குடுதீவு 9ம் வட்டாரத்தைச் சேர்ந்த பெல்மதுளை பிரபல வர்த்தகர் திரு கந்தையா சுப்பிரமணியம் அவர்களது 45வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



31 டிசம்பர் 2023 ஞாயிற்றுக்கிழமை மயிலிட்டியைச் சேர்ந்த திரு கந்தையா நன்னித்தம்பி அவர்களது 30வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



31 டிசம்பர் 2023 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சூரியகுமார் கேமலதா தம்பதிகளின் செல்வப்புதல்வி ஜெனிஷா சூரியகுமாரின் பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி ஜெனிஷா தனது பெற்றோர்கள் சகோதரியுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



01 ஜனவரி 2024 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சிவபாலன் லலிதகுமாரி இணையர்களும் மகள் செல்வி சந்தியா சிவபாலனும் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குப் புத்தாண்டு தினத்தன்று சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்



01 ஜனவரி 2024 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சர்வானந்தன் பவளராணி தம்பதிகளின் செல்வப்புதல்வன் ஹரிசன் சர்வானந்தனின் 22வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் ஹரிசன் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



01 ஜனவரி 2024 திங்கட்கிழமை புத்தாண்டு தினத்தன்று கனடாவில் வசிக்கும் திரு திருமதி சிங்கநாயகம் குடும்பத்தினர் செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்



01 ஜனவரி 2024 திங்கட்கிழமை கட்டுவன் தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரியை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பரஞ்சோதி சிவானந்தன் அவர்களது 4வத அண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




01 ஜனவரி 2024 திங்கட்கிழமை நயினாதீவு 3ம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்களான திரு திருமதி சுப்பர் பொன்னுத்துரை அவர்களதும் அவரது துணைவியார் திருமதி நாகமுத்து பொன்னுத்துரை அவர்களதும் 31வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னார்களது குடும்பத்தினர் அவர்களது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



01 ஜனவரி 2024 திங்கட்கிழமை கொழும்பைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு டானியல் எபநேசர் சிட்னி சாமுவேல் அவர்களது 7வது ஆண்டு நினைவாக அன்னாரது குடும்பத்தினர் புத்தாண்டு தினத்தன்று அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



05 ஜனவரி 2024 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் செல்வி மாதங்கி செல்வராஜா அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி மாதங்கி செல்வராஜா அவர்கள் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவும் குளிர்பானங்களும் வழங்கி மகிழ்ந்தார்.



29 டிசம்பர் 2023 வெள்ளிக்கிழமை சண்டிலிப்பாய் மேற்கைச் சேர்ந்த திரு முத்துத்தம்பி கதிரேசு அவர்களது 11வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




TITLE SPONSOR
eXp REALTY BROKERAGE MAHESAN SUBRAMANIAM BBA, AMP REALESTATE BROKER
ஆனலை எக்ஸ்பிறஸ் Analai Express HD TV
You Are Invited
Please Join Us...
பாரம்பரியம்
முத்தமிழோடு கலைஞர்களின் சங்கமம்
MUSIC & DANCES OVER 500 PERFORMERS
JANUARY
AT 3PM 6 SATURDAY
2024
VENUE:
CHINESE CULTURAL CENTRE
5183 SHEPPARD AVE E, SCARBOROUGH, ON M1B 5Z5
Thank You for Your Support
TITLE SPONSOR
eXp REALTY BROKERAGE
MAHESAN SUBRAMANIAM BROKER
BUY OR SELL : 416-816- 0141
GOLD SPONSOR
NANTHA CATERS INC
BEST INDIAN SRI LANKAN TAMIL RESTAURANT IN TORONTO
(416) 626-8421
SILVER SPONSOR
MORTGAGE ALLIANCE
ARI PARAMALINGAM Mortgage Agent
Work : (905) 781-1356 Cell: (905) 781-1356
Baveen Kana PHOTOGRAPHY
+1 (647) 283-2283
YAARL CAKE HOUSE INC
416-431-6604 | 416-431-6874
DYNEVOR EXPRESS
1-866-DYNEVOR (396-3867)
BRONZE SPONSOR
ARAJEN BEAUTY SPA & AGA BEAUTY LEARNING ACADEMY
+1 416 677-5511
ARIYA Boutique
647-406-2393
CAN LANKA IMMIGRATION SERVICE INC.
Direct: - 1-416-938-3768 (Pirapa)
HIMALAYA BANQUET SERVICE
647-201-7573 | 416-276-6867
Lanka Salon & Spa
லங்கா சலூன்
905-783-1895 905-808-9930
MISSISSAUGA BRAMPTON
OATC OCEAN ACCOUNTING TAX CONSULTANTS
(416) 285-6900
தனா யோகநாதன்
Thana Yoganathan
Broker MBA
416-418-5749
UTHAYA'S SUPER MARKET
416-740-7971 | 416-740-8568
VAIRAM
APPLIANCE REPAIR
905 904 3422
CHAPEL RIDGE
416-258-6759
Mr. Digital Photo Lab
(416) 746-0006
VASANTHA JEWELLERY INC.
SINCE 1987
+1 905.696.8585 / +1 416.587.0592
MUSIC & DANCES OVER 500 PERFORMERS
பாரம்பரியம்
முத்தமிழோடு கலைஞர்களின் சங்கமம்


பிரமாண்டமான கலை இரவு
MUSIC & DANCES OVER 500 PERFORMERS
TITLE SPONSOR
eXp REALTY BROKERAGE
MAHESAN SUBRAMANIAM BROKER
BUY OR SELL : 416-816- 0141
ஆனலை எக்ஸ்பிறஸ் Analai Express HD TV
பாரம்பரியம்
முத்தமிழோடு கலைஞர்களின் சங்கமம்
6 JANUARY 2024
SATURDAY 3.PM
CHINESE CULTURAL CENTRE 5183 SHEPPARD AVE E, SCARBOROUGH, ON M1B 5Z5
647.278.5881 | 416.678.5866
www.analai.ca | analai.parampariyam@gmail.com
GOLD SPONSOR
NANTHA CATERS INC
(416) 626-8421
SILVER SPONSOR
MORTGAGE ALLIANCE
ARI PARAMALINGAM Mortgage Agent
+1 (647) 283-2283
YAARL CAKE HOUSE INC
416-431-6604 | 416-431-6874
DYNEVOR EXPRESS
1-866-DYNEVOR (396-3867)
BRONZE SPONSOR
+1 416 677-5511
647-406-2393
Lanka Salon & Spa
OATC
(416) 285-6900
VAIRAM
APPLIANCE REPAIR
905 904 3422
CHAPEL RIDGE
416-258-6759
Mr. Digital Photo Lab
(416) 746-0006
Thana Yoganathan
416-418-5749
UTHAYA'S SUPER MARKET
VASANTHA JEWELLERY INC.
MEDIA SPONSOR
yugam radio
ஈழநாடு
உதயன்
IBC தமிழ்
Kushna LIVE
Easy 24 News

சுவாமியே சரணம் ஐயப்பா!

# அருள்மிகு கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்

# CANADA SRI AYYAPPAN HINDU TEMPLE

635 MIDDLEFIELD ROAD, SCARBOROUGH, ON, M1V 5B8 TEL: 416-321-6104 | www.ayyappan.ca

## மண்டல மகர விரத விஞ்ஞாபனமும் ஐயப்பன் மாலை அணியும் வைபவமும்

### 17-11-2023 வெள்ளிக்கிழமை முதல் 21-01-2024 ஞாயிற்றுக்கிழமை வரை

**ஐயப்பன் மெய்யடியார்களே!**

**கலியுகத்தில் தர்மம் குன்றி அதர்மம் மேலிட்டு துன்ப சாகரத்தில் உழலும் வேளையில் தன்னை நாடி வந்த பக்தர்களை கைவிடாத தெய்வம், பட்ட பந்தம் அணிந்து சின்முத்திரைகாட்டி நிராயுதபாணியாய் காட்சி தந்து நெஞ்சுருகி, நெஞ்சுருக வைத்து எம்மை அயராது ரட்சிக்கும் பகவான் ஐயப்பன். ஸ்காபரோ - 635 மிடில்பீல் றோட்டில் அமைந்துள்ள கனடா ஸ்ரீஐயப்பன் இந்து ஆலயத்தில் மண்டல மகர விரத மாலை அணியும் வைபவம் 17.11.2023 வெள்ளிக்கிழமை அதிகாலை 5.00 மணிக்கு கணபதி ஹோமம், தொடர்ந்து சாஸ்தா ஹோமம். அதிகாலை 6.00 மணிமுதல் இரவு 8.00 மணிவரை புனித துளசிமாலை அணியும் வைபவம் இடம் பெறும். மாலை அணிந்து விரதமிருக்க விரும்பும் அடியார்கள் தங்கள் பெயர்களை முன்கூட்டியே ஆலய காரியாலயத்தில் கட்டாயம் பதிவு செய்து கொள்ளவும்.**

### தினமும் இரவு 9.15மணிக்கு ஹரிவராஸன பூசை இடம் பெறும்.

**வனதேவதை, பூஜை -** 16-11-2023 வியாழக்கிழமை மாலை 6.00 மணி

**விசேட ஹோமம் - மாலை அணிதல் -** 17-11-2023 வெள்ளிக்கிழமை - அதிகாலை 4.00 மணிக்கு கணபதி ஹோமம், தொடர்ந்து சாஸ்தா ஹோமம். துளசி மாலை அணியும் வைபவம் அதிகாலை 5.00 மணிமுதல் இரவு 8.00 மணிவரை இடம் பெறும்

**சுவாமிமார்களின் விளக்குப்பூசை**
24-11-2023 வெள்ளிக்கிழமை, 25.11.2023 சனிக்கிழமை ஆகிய இருதினங்களும் மாலை 5.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை இடம் பெறும்.

**ஆஞ்சநேய யாகம் -** 26-11-2023 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 முதல் 11.00 மணி வரை நடைபெறும்.

**சுவாமிமார்களின் இலட்சார்ச்சனை**
01.12.2023 வெள்ளிக்கிழமை, 02.12.2023 சனிக்கிழமை ஆகிய இரு தினங்களும் காலை 10.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரையும், மாலை 6.00 மணி முதல் மாலை 7.00 மணி வரையும் இடம் பெறும்.

**1008 கலச சங்காபிசேகம் -** 10-12-2023 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு இடம் பெறும்.

**பால்குட அபிஷேகம்** 17-12-2023 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி முதல் 11.00 மணிவரையும், மாலை 6.00 மணி முதல் மாலை 7.00 மணிவரையும் இடம் பெறும்.

**புலிப்பால் வேட்டை -** 17-12-2023 ஞாயிற்றுக்கிழமை மதியம் இடம் பெறும்.

**நாகராஜ உற்சவம் - சர்ப்ப சாந்தி** - 17-12-2023 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரையும் இடம் பெறும்.

**நெய் நிரப்புதல், இருமுடி கட்டுதல், பேட்டை துள்ளுதல் படி ஏறி அபிஷேகம் செய்தல்**
25-12-2023 திங்கட்கிழமை, 26.12.2023 செவ்வாய்க்கிழமை ஆகிய தினங்களில் அதிகாலை 6:00 மணி முதல் மாலை 5:00 மணி வரையும் இடம் பெறும். தொடர்ந்து 27.12.2023 புதன்கிழமை தொடக்கம் 31.12.20223 ஞாயிற்றுக்கிழமை வரை காலை 8:00 மணி முதல் காலை 11:00 மணி வரையும் நெய் அபிஷேகம் நடை பெறும்.

**பேட்டை துள்ளுதல்**
26-12-2023 செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணிக்கு இடம்பெறும்.

**மஞ்சமாதா திருவிழா, புஸ்பாபிசேகம்**
01-01-2024 திங்கட்கிழமை முதல் 15-01-2024 திங்கட்கிழமை வரை இடம்பெறும்.

**மகர சங்கிராந்தி, திருபாபரணம், மகரஜோதி தரிசனம், பூச்சொரிதல், தைப்பொங்கல்**
15-01-2024 திங்கட்கிழமை

**வைரவர் மடை, வனபூஜை, குருதிபூஜை, வேண்டுதல் நிறைவேற்று உற்சவம்**
21-01-2024 ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00 மணிக்கு இடம் பெறும்.



**அடியார்கள் புனிதமான ஐயப்பன் மகரமண்டல பூசைக்காலத்தில் பக்தி சிரத்தையுடன் காலை, மாலை நடைபெறும் ஐயப்பூசை விழாக்களில் கலந்து கொள்வதுடன் முடிந்தவரை மண்டலபூசை உபயங்களை பொறுப்பேற்று சிறப்பித்து ஐயப்ப பெருமானின் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

### பக்தர்களுக்கு முக்கிய அறிவித்தல்கள்

1. மாலை அணிதல் 17.11.2023 வெள்ளிக்கிழமை அதிகாலை 5:00 மணிக்கு ஆரம்பமாகும்.
2. ஆலயத்தினுள் கைத்தொலைபேசியை பாவிக்க வேண்டாம்.
3. ஆலயத்தினுள் புகைப்படம், வீடியோ எடுப்பதாயின் காரியாலயத்தில் அனுமதி பெற்றுக் கொள்ளவும்.

- இறை சேவையிலுள்ள ஆலய அறங்காவலர் சபை



கனடா – அருள்மிகு

**ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்**

104 Rivalda Rd Northyork - On - M9M 2M8 (Weston/Sheppard)

Tel: 416.213.0110 ▪ www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 8.30 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அம்பாள் அடியார்களே!

## கனடா முத்துமாரியம்மன்
## அங்கத்துவர்களுக்கான வருடாந்த மகாசபை கூட்டம்.

27 ஜனவரி 2024 சனிக்கிழமை கனடா முத்துமாரியம்மன் ஆலயத்தில் மாலை 2.00 மணிக்கு நடைபெறும். அங்கத்தவர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். அங்கத்தவர்கள் அனைவரும் மாதாந்த சந்தா பணத்தை செலுத்துமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

எமது ஆலயம் புதிய முகவரிக்கு இடம் மாறியுள்ளது என்பதை அறியத் தருவதுடன் விரைவில் புதிய இடத்தில் அம்மனுக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அதேவேளை நாளாந்தம் வழமை போன்று பூஜை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன என்பதை அம்பாள் அடியார்களுக்கு அறியத் தருவதுடன் அம்பாளின் திருப்பணிக்கு உங்களால் முடிந்தளவு பங்களிப்பைச் செய்யுமாறு வேண்டுகின்றோம்.

**இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்**

# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்க்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**, Cell: **416.450.5011**
Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com



# 2024 வெற்றி ஆண்டா? தோல்வி ஆண்டா?

கடந்த 24ஆம் திகதி இரவு பதினோரு மணிக்கு அதாவது நத்தார் பிறப்புக்கு முன். மட்டக்களப்பில் ஒரு சோகமான சம்பவம் இடம்பெற்றது. 42 வயதான ஒரு குடும்பஸ்தர் கல்லடி பாலத்தில் இருந்து வாவிக்குள் குதித்து தற்கொலை செய்ய முயற்சித்தார். ஆனால் நீரில் மூழ்கத் தொடங்கியதும் சாகப் பயந்து பாலத்தின் தூண் ஒன்றைப் பிடித்துக் கொண்டு தத்தளித்திருக்கிறார். படகுகளில் மீன் பிடித்துக் கொண்டிருந்தவர்கள் அவரைக் காப்பாற்றினார்கள்.

போலீஸ் அவரை தற்கொலை செய்ய முயன்ற குற்றச்சாட்டில் கைது செய்திருக்கிறது. அவர் ஒரு ஏழை மேசன். ஐந்து பிள்ளைகளின் தந்தை. கட்டிடப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டதால் அவருக்கு தொழில் இல்லை. நத்தார் சீசனை முன்னிட்டு ஆடைகள் வாங்கக் காசு இல்லை. வீட்டில் மனைவி நச்சரித்திருக்கிறார். எனவே, வாழ்க்கை வெறுத்துப் போன அக்குடும்பத் தலைவர், இயேசு நாதர் பிறந்த நாள் எனது இறந்த நாளாக அமையட்டும் என்று கூறி பாலத்தில் இருந்து குதித்து தற்கொலை செய்ய முயற்சித்திருக்கிறார். இயேசு பிறப்பை தனது இறப்பாக அறிவிக்கும் அளவுக்கு ஒரு ஏழை கிறிஸ்தவரை வறுமை தாக்கியிருக்கிறது. இது தான் நாட்டில் ஆண்டு இறுதி நிலவரம்.

நாட்டில் நத்தார் மரத்தின் விலையை வைத்து நாட்டின் பொருளாதாரத்தை மதிப்பிடலாம். டிசம்பர் மாதத்தின் தொடக்கத்தில் ஒன்றரை அடி உயரமான ஒரு நாத்தார் மரம் கிட்டத்தட்ட 3500 ரூபாய்க்கு விற்கப்பட்டது. எனினும் ஒரு கிழமைக்கு பின் சுமார் 4 அடி உயரமான நத்தார் மரம் 6000 ரூபாய்க்கு வந்தது. ஆனால் முட்டை விலை குறைய வில்லை. கூடியது.ஒரு மூட்டை 60 ரூபாய். இம்முறை பெரும்பாலான எழைகளின் வீடுகளில் கேக் இல்லாத கிறிஸ்மஸ் தான்.

முட்டை விலை மட்டுமல்ல பச்சை மிளகாய், தக்காளி உள்ளிட்ட அனைத்து மரக்கறிகளின் விலைகளும் உயர்ந்து விட்டன.வழமையாக கிறிஸ்மஸ் சீசனில் மரக்கறி விலைகள் உயர்வதுண்டு.தைப் பிறப்போடு குறைவதுண்டு. ஆனாலும் இம்முறை விலை உயர்வு அசாதாரண மாகக் காணப்பட்டது. பச்சை மிளகாய் ஒரு கிலோ 1400 ரூபாயிலிருந்து 2000 ரூபாய்வரை போனது. வெங்காயம் தக்காளியின் விலைகளும் அதிகம். சிங்கள யூ டியூப்பர்கள் மரக்கறி விலை உயர்வைக் காட்ட சில வேடிக்கையான காணொளிகளை வெளியிட்டார்கள்.

அதில் ஒரு காணொளியில் ஒரு பச்சை மிளகாயை நூலில் கட்டி கறிக்குள் போடுகிறார்கள். கறி காய்சியதும் அதை எடுத்து மற்றொரு கறிக்குள் போடுகிறார்கள். வேறு ஒரு காணொளியில் ஐந்தாறு பச்சை மிளகாய்கள் ஒரு பக்கம் இன்னொரு பக்கம் ஒரு தக்காளிப் பழம் மட்டும். அதாவது ஒரு தக்காளி பழத்தின் பெறுமதி தான் ஐந்தாறு பச்சை மிளகாய்கள் என்று பொருள். இப்படித் தான் இம்முறை நாட்டில் ஆண்டிறுதி அமைந்தது.

இந்த லட்சணத்தில் அடுத்த ஆண்டு நெல் உற்பத்தி பாதிக்கப்படலாம் என்று விவசாயிகள் எச்சரிக்கிறார்கள். நெற் பயிர்களைத் தாக்கும் வெள்ளைத் தத்தியை அழிப்பதற்கு விவசாயத் திணைக்களம் முயற்சிக்கவில்லை என்றும் அதனால் விளைச்சல் பாதிக்கப்படலாம் என்று விவசாயிகள் கூறுகிறார்கள். அதாவது பழைய ஆண்டு நல்ல செய்திகளோடு முடிய வில்லை. புதிய ஆண்டும் நல்ல செய்திகளோடு பிறக்கவில்லை என்று பொருள்.

புதிய ஆண்டில்.அரசாங்கம் வற் வரியை அதிகரிக்க உள்ளது. இருபது ஆண்டுகளில் ஆகப்பெரிய வரி அதிகரிப்பு இது. புதிய ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட அனைவரும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பதிந்து வரிசெலுத்துனர் அடையாள இலக்கத்தை வைத்திருப்பது கட்டாயமாகும். அவ்வாறு பதிவு செய்யாதிருப்பது 50.000 ரூபாய்க்குக் கூடாத அபராதத்தை விதிக்கக்கூடிய தண்டனைக்குரிய குற்றம் என்று ஒரு செய்தி சமூக வலைத்தளங்களில் அதிகமாகப் பரவி வருகிறது

புதிய ஆண்டு வரி அதிகரிப்பின் ஆண்டாக மட்டும் அமையப் போவதில்லை. அது ஒரு தேர்தல் ஆண்டாகவும் அமையப் போகின்றது என்பதுதான் இலங்கைத் தீவின் அரசியல் அவலம். ஆண்டின்



தொடக்கத்தில் தமிழரசு கட்சிக்குள் தலைவர் யார் என்பதற்குத் தேர்தல் நடக்கும். ஆண்டின் இறுதியில் அடுத்த ஜனாதிபதி யார் என்பதைத் தீர்மானிக்கும் தேர்தல். ஒரு தேர்தலில் தொடங்கி மற்றொரு தேர்தலில் முடியப்போகும் ஆண்டு.

நாடு இப்போதுள்ள நிலையில் தமிழரசியல் இப்போதுள்ள நிலையில் தமிழரசுக் கட்சிக்குள் ஒரு தேர்தல் அவசியமா? என்று ஒரு நண்பர் கேட்டார். கடந்த 15 ஆண்டுகளாக தமிழரசுக் கட்சி தமிழ் மக்களுக்கு எதைப் பெற்று தந்திருக்கின்றது? எதையுமே பெற்று தரவில்லை. அதற்கு அதன் தலைமை தான் காரணமா? ஒரு புதிய தலைமை கிடைத்து விட்டால், தமிழரசுக் கட்சி அதிசயங்களையும் அற்புதங்களையும் நிகழ்த்தி விடும் என்று எதிர்பார்க்கலாமா ? என்றும் அவர் கேட்டார்.

உண்மை தான். தமிழரசுக் கட்சிக்குள் இப்பொழுது நடப்பவை யாவும் கடந்த 15 ஆண்டுகாலத் தோல்வியின் விளைவுகளே. அந்தத் தோல்விக்கு எல்லாருமே கூட்டுப்பொறுப்பு. இப்பொழுது தலைமைப் பதவிக்காகப் போட்டியிடும் அனைவருமே அதற்குக் கூட்டுப்பொறுப்பு. தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள மிகப் பெரிய கட்சி அது என்ற அடிப்படையில் அக்கட்சியின் தோல்வி தான் தமிழரசியலின் தோல்வியும் எனலாம். அக்கட்சியின் எல்லா மூத்த தலைவர்களும் அதற்குப் பொறுப்புக்கூற வேண்டும். இவர்களில் யார் தெரிவு செய்யப்பட்டாலும் தமிழரசியலை வெற்றிப்பாதையில் செலுத்த முடியுமா?

யார் தலைவராக வந்தாலும் அவர்கள் முன் இரண்டு பெரிய பொறுப்புக்கள் உண்டு. முதலாவது பொறுப்பு, கடந்த 15 ஆண்டுகளாக உடைந்து உடைந்து சிறுத்துக் கொண்டு வரும் தமிழ் ஐக்கியத்தை மீளக் கட்டியெழுப்ப வேண்டும். கடந்த 15 ஆண்டுகளாக தமிழ் ஐக்கியம் உடைந்து போனதற்கு தமிழரசுக் கட்சி தான் பெரும் பொறுப்பு. அக்கட்சி ஏனைய கட்சிகளை அவமதித்தது. அல்லது ஏனைய கட்சிகளுக்குள்ளால் தேர்தல் கேட்டு வெற்றி பெற்றவர்களை உருவி எடுத்துத் தன்னுடன் சேர்த்துக் கொண்டது. இவ்வாறு, தான் ஒரு பெரிய கட்சி என்ற அடிப்படையில் மூத்த கட்சி என்று அடிப்படையில்.அதற்குரிய பக்குவத்தோடு பெருந்தன்மையோடு தமிழரசுக் கட்சி நடந்து கொள்ளவில்லை.

தன்னுடைய பெயருக்குத் தான், தன்னுடைய சின்னத்துக்குத் தான் தமிழ் மக்கள் வாக்களிக்கிறார்கள் என்று தமிழரசுக் கட்சி நம்பியது. தான் ஒரு தும்புத் தடியை தேர்தலில் முன்னிறுத்தினாலும் மக்கள் கண்ணை மூடிக்கொண்டு வாக்களிப்பார்கள் என்று தமிழரசுக் கட்சி திமிரோடு நம்பியது. அதனால் ஏனைய பங்காளிக் கட்சிகள் தன்னுடைய பலத்தில் தான் கூட்டமைப்புக்குள் தொங்கிக் கொண்டிருக்கின்றன என்றும் கருதியது. அதனால் பங்காளிக் கட்சிகளை அவமதித்தது புறக்கணித்தது. ஒன்றாக இருக்க முடியாதபடி அவமானகரமான ஒரு சூழலை ஏற்படுத்தியது. விளைவாக, ஐக்கியம் உடைந்தது கூட்டமைப்பு சிதைந்தது. இப்பொழுது தமிழரசு கட்சிக்குள்ளேயே உடைவுகள் சிதைவுகள் உருவாகி விட்டன. எனவே ஒரு மூத்த பழம்பெரும் கட்சியின் தலைவராக வரப் போகும் ஒருவர் முதலில் உடைந்து சிதறிய ஐக்கியத்தை மீளக் கட்டியெழுப்ப வேண்டும்.

அதன்பின் அடுத்த கட்டமாக தமிழ் மக்களின் அரசியல் இலக்கை வென்றெடுப்பதற்கான வழி வரைபடத்தை தயாரிக்க வேண்டும்.எல்லாருமே சமஸ்ரியைத் தான் கேட்கின்றார்கள். ஆனால் யாரிடமாவது சமஸ்ரியை அல்லது அதை விட உயர்வான ஒரு தீர்வைப் பெறுவதற்கான வழிவரைபடம் உண்டா? தமிழரசுக் கட்சிக்கு ஆங்கிலப் பெயர் சமஸ்ரிக் கட்சி என்பது தான். ஆனால் செல்வநாயகம் காலத்தில் இருந்து இன்று வரையிலும் 73 ஆண்டுகளாக சமஸ்ரியைப் பெற முடியவில்லை.கட்சியின் புதிய தலைமை அதற்குரிய வழி வரைபடத்தை தெளிவாக முன் வைக்குமா?



அந்த வழி வரைபடத்தின் அடிப்படையில் தமிழரசியலை வழி நடத்தத் தேவையான தகைமை கொள்ளளவு தியாக சிந்தை விசுவாசம் போன்றன தமிழரசுக் கட்சிக்குள் உள்ள எந்தத் தலைவரிடம் உண்டு? அப்படி ஒரு தலைவரிடம் எல்லா தகைமைகளும் இல்லையென்றால், பல்வேறு வகைப்பட்ட ஆளுமைகள் இணைந்த இணைத்தலைமையை உருவாக்கலாம். அது தான் இப்போதிருக்கும் நடைமுறைச் சாத்தியமான ஒரே வழி.

இது தொடர்பாக அரசியல் விமர்சகர் ஜோதிலிங்கம் ஏற்கனவே தமிழரசுக் கட்சிக்குக் கூட்டுத் தலைமை வேண்டும் என்று கூறியிருக்கிறார். அதற்கு அவர் தமிழர் விடுதலைக் கூட்டணியை உதாரணமாக காட்டியிருக்கிறார். தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் வேறு வேறு கட்சிகள் இணைந்தன. அதனால் அக் கட்சிகளின் தலைவர்கள் கூட்டுத் தலைமையை ஏற்றுக் கொண்டார்கள். ஆனால் தமிழரசுக் கட்சி ஒரே கட்சி. அங்கே ஒருவர் மற்றவரை விட தன்னை மேலானவராக கருத முற்பட்டதன் விளைவாகத்



கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -

தான் போட்டோ போட்டிகள் ஏற்பட்டன. எனவே ஒரே கட்சிக்குள் இணைத் தலைமைகளை ஏற்றுக் கொள்வது என்பது உயர்ந்த பட்ச ஜனநாயகம் ஆகும். 2009 க்குப்பின் தோன்றிய தமிழ் மக்கள் பேரவையும் இணைத் தலைமைகளைக் கொண்டிருந்தது என்பதனை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். இணைத் தலைமையை ஏற்றுக் கொள்வது என்பது தன்னிடம் இல்லாத தகுதி வேறு யாரிடமோ இருக்கிறது என்பதனை ஏற்றுக் கொள்வது தான். சட்டப் புலமை, ஆங்கில அறிவு போன்ற தகுதிகள் மட்டும் தலைமை தாங்கப் போதுமானவை அல்ல. போராட்ட பாரம்பரியமும் பலமான வாக்கு வங்கியும் மட்டும் தலைமை தாங்கப் போதுமானவையல்ல

.2009க்குப் பின்னரான தமிழ்த் தலைமைகளுக்கு அதைவிடக் கூடுதலாக பண்புரு மாற்றத்திற்குத் தேவையான தகமைகள் அதிகம் வேண்டும். பண்புரு மாற்றம் என்பது கட்சித் தலைமையை கைப்பற்றுவதற்காக மற்றவர்களைச் சுதாகரித்து தமிழ்த் தேசிய முகமூடி அணிந்து நடிப்புக்கு உறவு பாராட்டுவது அல்ல.

ஆயுதப் போராட்டம் ஒன்றுக்கு பின்னரான மிதவாத அரசியலுக்குத் தேவையான பிராந்திய மற்றும் பூகோள நிலைமைகளைப் பொருத்தமாகக் கையாளத் தேவையான புதிய தொழில்நுட்ப வளர்ச்சியை உள்வாங்கி புதிய மாற்றங்களுக்கு தயாரான் தலைமைகளே தமிழ் மக்களுக்குத் தேவை. தமிழரசுக் கட்சி அதற்குத் தயாரா?

2023முடியும் போது காணாமல் போகச் செய்யப்பட்டவர்களுக்கான போராட்டம் 2500ஆவது நாளைக் கடந்திருக்கிறது. மயிலத்தமடுவில் மேச்சல் தரையை மீட்பதற்கான போராட்டம் நூறாவது நாளைக் கடந்திருக்கிறது. சமஷ்ரிக் கட்சி அதாவது தமிழரசுக் கட்சி சமஸ்ரியை அடையத் தவறிய 73ஆவது ஆண்டு கடந்திருக்கிறது. புதிய ஆண்டு தமிழரசுக் கட்சியின் 74ஆவது தோல்வியாண்டாக அமையுமா? அல்லது, கடந்த ஒரு நூற்றாண்டு காலத் தோல்வியில் இருந்து கற்றுக் கொண்ட ஆண்டாக அமையுமா?

# கை மாறும் மத்தள சர்வதேச விமான நிலையம்

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



அம்பாந்தோட்டை துறைமுகத்தை சுற்றி இருந்த சர்ச்சைகள் இப்போது குறைய தொடங்கியுள்ள நிலையில், மத்தள சர்வதேச விமான நிலையம், புவிசார் அரசியலை மையப்படுத்திய விவகாரமாக மாறத் தொடங்கி இருக்கிறது.

அம்பாந்தோட்டையில் சீனாவின் கடன் உதவியுடன் கட்டப்பட்ட துறைமுகத்தை, இலாபகரமாக இயக்கவும் முடியாமல், அதற்காக பெறப்பட்ட கடனை அடைக்கவும் முடியாமல், அதனை சீனாவிடமே 99 வருட குத்தகைக்கு விடும் நிலைக்கு இலங்கை அரசாங்கம் தள்ளப்பட்டது. அதேபோன்று தான். 247.7 மில்லியன் டொலர் செலவில் மத்தள விமான நிலையம் அமைக்கப்பட்டு, 2013 ஆம் ஆண்டில் திறந்து வைக்கப்பட்டது.




அம்பாந்தோட்டை துறைமுகத்தில் இருந்து 18 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள இந்த விமான நிலையத்துக்கும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த மஹிந்த ராஜபக்ஷவின் பெயரே சூட்டப்பட்டுள்ளது. அம்பாந்தோட்டையை பூ ர்வீகமாகக் கொண்ட மஹிந்த ராஜபக்ஷவினர், தமது மாவட்டத்தில் உருவாக்கிய முக்கியமான மூன்று 'வெள்ளை யானை' திட்டங்களில் இந்த விமான நிலையமும் ஒன்று.

மத்தள விமான நிலையம் திறக்கப்பட்ட பின்னர் 2017 தொடக்கம் 2022 வரையான ஐந்து ஆண்டுகளில் மட்டும், 42.81 பில்லியன் ரூபா நட்டத்தை சந்தித்திருக்கிறது. 2022 ஆம் ஆண்டு 103,324 பயணிகள் மாத்திரம், மத்தள விமான நிலையம் ஊடாகப் பயணம் மேற்கொண்டிருக்கின்றனர். ஆனால், இந்த விமான நிலையத்தை இயங்குவதற்கு மாத்திரம், கடந்த ஆண்டு 2.03 பில்லியன் ரூபா செலவிடப்பட்டிருக்கிறது.

இது வருமானத்தை விட 26 மடங்கு அதிகம். இந்த ஆண்டில், மத்தள விமான நிலையத்தின் நட்டத்தை 1.1 பில்லியன் ரூபாவாக குறைந்திருப்பதாக, துறைமுகங்கள், கப்பல்துறை, விமான போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா கடந்த மாதம் பாராளுமன்றத்தில் கூறியிருந்தார்.

ஆனால், மத்தள சர்வதேச விமான நிலையத்தை விட மிகச் சிறிய, மிகக் குறைந்த வசதிகளை கொண்ட நாளொன்றுக்கு ஒரே ஒரு சர்வதேச விமானம் வந்து செல்கின்ற பலாலி விமான நிலையம் கூட, இந்த ஆண்டில் 1.2 மில்லியன் ரூபாவை இலாபமாக பெற்றிருக்கிறது.

பலாலி விமான நிலையத்தின் மூலம் கிடைத்த வருமானத்தை கூட பெற முடியாத, மத்தள விமான நிலையம் இப்போது பேசுபொருளாக இருப்பதற்கு காரணம், அதனை பெற்றுக் கொள்வதற்கு இந்தியாவும் ரஷ்யாவும் மேற்கொள்ளும் முயற்சி தான்.

மத்தள விமான நிலையம், நட்டத்தில் இயங்கி வருகின்ற நிலையில் அதனை இலாபகரமானதாக இயக்குவதற்கு வழி தெரியாத அரசாங்கம், வெளிநாட்டு நிறுவனங்களிடம் குத்தகைக்கு வழங்குவதற்கு திட்டமிட்டிருக்கிறது. 7 நாடுகளின் நிறுவனங்கள் இந்த விமான நிலையத்தை பொறுப்பேற்பதற்கு விருப்பம் வெளியிட்டுள்ளதாக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா கூறியிருந்தார். ஏற்கெனவே நல்லாட்சி அரசின் காலத்தில், நெல் களஞ்சியப்படுத்துவதற்கு பயன் படுத்தப்பட்ட மத்தள விமான நிலையத்தை, இந்தியாவுக்கு குத்தகைக்கு வழங்குவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், சில தடங்கல்கள் காரணமாக அந்த திட்டம் நிறைவேறவில்லை.

இப்போது இந்தியாவுடன் இணைந்து ரஷ்யாவோ, ரஷ்யாவுடன் இணைந்த இந்தியாவோ மத்தள விமான நிலையத்தை பொறுப்பேற்று இயக்குவதற்கு திட்டமிடுகின்றன என்பது வெளிப்படையாகியுள்ளது இலங்கைக்கான ரஷ்ய தூதுவர் லெவன் எஸ் சகார்யன், மத்தள விமான நிலையத்தை இந்தியாவுடன் கூட்டாக நிர்வாகிப்பது தொடர்பாக ஆலோசிக்கப்பட்டு வருவதாக கூறியிருந்தார்.

முன்னதாக இது பற்றி கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு வருவதாக துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அமைச்சின் செயலாளர் ருவான் சந்திரவும், குறிப்பிட்டிருந்தார். இந்த கலந்துரையாடல்கள் எதுவும் தீர்க்கமான முடிவுகளை தராத போதும் ரஷ்யாவும் இந்தியாவும் இந்த விடயத்தில் அக்கறை கொண்டுள்ளன, பேச்சுக்களை முன்னெடுக்கின்றன என்பது மட்டும் தெளிவாக இருக்கிறது.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனா நீண்டகால குத்தகைக்கு பெற்றுள்ள நிலையில், மத்தள விமான நிலையத்தின் மீதான இந்தியாவின் ஆர்வம் அதிகரிப்பது ஒன்றும் ஆச்சரியப்படத்தக்கதல்ல.

ஆனால், ரஷ்யாவுக்கு இந்த விமான நிலையத்தின் மீது ஏற்பட்டிருக்கின்ற ஈர்ப்பு சாதாரணமானது அல்ல. இந்த ஆண்டு டிசம்பர் 17ஆம் திகதி வரை இலங்கைக்கு வருகை தந்த 1.4 மில்லியன் வரையிலான சுற்றுலா பயணிகளில், 181,997 பேர் ரஷ்யாவில் இருந்து வந்தவர்கள். இந்தியாவை அடுத்து ரஷ்யாவில் இருந்தே அதிக அளவு சுற்றுலா பயணிகள் இந்த ஆண்டில் இலங்கைக்கு வந்தனர். அடுத்த ஆண்டில் 1.2 மில்லியன் ரஷ்ய சுற்றுலா பயணிகளை ஈர்க்கின்ற திட்டத்தை இலங்கை அரசாங்கம் கொண்டிருக்கிறது. உக்ரேன் ரஷ்ய போர், இலங்கைக்கு வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையை பாதிக்கும் என கருதப்பட்டது. ஆனாலும், இந்தியாவுக்கு அடுத்ததாக ரஷ்யாவில் இருந்தே அதிக சுற்றுலா பயணிகள் இலங்கைக்கு வருகை தந்தனர். விமானப் போக்குவரத்து அதிகரிப்பின் மூலம் இந்த எண்ணிக்கையை பல மடங்கினால் அதிகரிக்க முடியும் என்று இலங்கை அதிகாரிகள் நம்புகிறார்கள். ரஷ்யாவில் இருந்து நேரடியாக விமானங்களில் மூலம் அல்லது சுற்றுலா விமானங்களின் மூலம் வருகை தருகின்ற ரஷ்ய பயணிகளில் கணிசமானவர்கள் அம்பாந்தோட்டை விமான நிலையத்திலேயே தரையிறங்கினர்.

ரஷ்ய விமானங்கள் அங்கு சிக்கலேதுமின்றி நேர விரயமின்றி தரையிறங்கி செல்வதற்கு வசதியாக உள்ளது. இவ்வாறான நிலையில் இலங்கையுடனான சுற்றுலா நெருக்கத்தை அதிகரித்துக் கொள்ள விரும்பும் ரஷ்யா, இன்னொரு பக்கம் இலங்கையில் சிறிய அளவிலான அணுசக்தி மின் நிலையம் ஒன்றை அமைப்பதற்கும் தயாராகி வருகிறது.

இந்த இரண்டும் இந்தியாவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான நெருக்கத்தை மேலும் அதிகரிக்கும் என்ற எதிர்பார்ப்பை ஏற்படுத்தி இருக்கிறது. ரஷ்யாவுக்கு இந்திய பெருங்கடலில் தளங்கள் எதுவும் கிடையாது. இந்தியாவுடன் ரஷ்யாவுக்கு நெருங்கிய நட்பு இருந்தாலும், அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் இடையில் காணப்படுகின்ற நெருங்கிய உறவுகள் காரணமாக, மூலோபாய பாதுகாப்பு நலன்கள் விடயத்தில் முற்று முழுதாக இந்தியாவை நம்பி இருக்க முடியாது.

அதனால், இலங்கையில் மத்தள விமான நிலையத்தை நிர்வகிப்பது மற்றும் அணுமின் நிலையத்தை அமைப்பதன் ஊடாக இந்தியப் பெருங்கடலில் தனது அழுத்தமான உள் நுழைவை ரஷ்யா வெளிப்படுத்த விரும்பக் கூடும். இந்தியாவைப் பொறுத்தவரை சீனாவின் வலுவான ஒரு துறைமுகத்துக்கு அருகே, தனது இருப்பை நிலைப்படுத்திக் கொள்வது, நீண்டகால நோக்கில் சாதகமானதாக அமையும் என்று கருதுகிறது. மத்தள விமான நிலையத்தை கூட்டாக நிர்வாகிப்பதன் ஊடாக, இந்தியா தனது பிராந்திய அதிகாரத்தை மேலும் வலுப்படுத்திக் கொள்ள முடியும்.

மாலைதீவில் நிலை கொண்டிருக்கும் இந்திய படையினரை அங்கிருந்து வெளியேற்றும் முடிவுக்கு மொஹம்மட் முய்ஸு அரசாங்கம் தீர்மானித்துள்ள சூழலில் இலங்கை போன்ற ஒரு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் ,ந்தியா தனது நலன்களை உறுதிப்படுத்திக் கொள்வது அவசியமானதாக உள்ளது. புதுடெல்லி இந்த விடயத்தில் காட்டுகின்ற ஈடுபாடு சீனாவுக்கு சவாலானதாகவே இருக்கும். ஆயினும் ரஷ்யாவும் இந்தக் கூட்டில் இருப்பது மட்டுமே சீனாவுக்கு இருக்கின்ற ஒரே ஆறுதல்.



# தோல்வியை சரி செய்வதற்கான அரசியல்?

2023ஆம் ஆண்டு நம்மை கடந்து செல்கின்றது. 2009 இற்குப் பின்னரான ஆண்டுகள் எவ்வாறு நம்மை சாதாரணமாக கடந்து சென்றதோ, அவ்வாறு தான் இந்த ஆண்டும் செல்கின்றது. கடந்த 14 ஆண்டுகளில் எவ்வாறான அரசியல் உரையாடல்கள் இருந்ததோ, அது தான் இந்த ஆண்டிலும் இருந்தது.

இந்த ஆண்டில் இடம் பெற்ற புதிய விடயம் ஒன்று தான், அதாவது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உடைவுற்றதை குறிப்பிடலாம். அப்படிப் பார்த்தால், அரசியலில் முன்னேற்றம் இல்லை. மாறாக இருப்பதையும் சிதைக்கும் பணி தான் இடம் பெற்றிருக்கின்றது. 2009 இற்குப் பின்னரான காலம் முழுவதும் தோல்லியை பேசும் காலமாகவே கழிந்திருக்கின்றது. தோல்வியை பேசுவதில் 2 வகைகள் உண்டு.

ஒன்று, தோல்விக்கான காரணங்களை துல்லியமாக அறிந்து கொள்வது, அதன் ஊடாக எழுந்து நிற்பதற்கான அறிவைப் பெறுவது.

இரண்டாவது வகை, தோல்விக்கான காரணங்களை மற்றவர்கள் மீது சுமத்தி விட்டு, பழி வாங்கும் மனோநிலையில் செயற்படுவது.

முதலாவது விடயத்தில் தெளிவாக இருப்பவர்கள், ஒருபோதும் இரண்டாவது தெரிவைப் பற்றி சித்திக்க மாட்டார்கள். ஏனென்றால், தமிழரின் தோல்விக்காக பழி வாங்குதென்றால் முழு உலகத்தையும் எதிர்த்து நிற்க வேண்டும்.

ஏனெனில் விடுதலைப் புலிகளின் முடிவு என்பது ஒரு உலகத் தீர்மானம். அதற்கு அன்றிருந்த உலக அரசியல் சூழலும் ஒரு பிரதான காரணம். விடுதலைப்புலிகளின் தலைமை அன்றைய உலக நிலைமைகளை சரிவர கணிக்கத் தவறியது. அதில் அனைவருக்கும் பொறுப்புண்டு.

பாலசிங்கம் தொடக்கம் அன்று பேச்சுவார்த்தையில் பங்கு கொண்ட உருத்திரகுமாரன் வரையில். ஆனால் பொறுப்புக் கூறும், பொறுப்பேற்கும் மனோநிலை எவரிடமும் இல்லை. அவ்வாறு இருந்திருந்தால் இப்போதும் தனிநாடு தொடர்பில் உருத்திரகுமாரன் பேசிக் கொண்டிருக்க மாட்டார். தங்களின் தவறுகளுக்கு பொறுப்புக்கூறும் மனோநிலை, தமிழ் தலைவர்கள் என்போருக்கு இருந்திருந்தால், கடந்த 14 ஆண்டுகளில், சில முன்னேற்றங்களை கண்டிருக்க முடியும்.



ஆனால் காலம் கடந்தாவது சிலருக்கு சில விடயங்கள் புரிகின்றது. கண் கெட்ட பின்னர் சூரிய நமஸ்காரம் போல் இருந்தாலும் கூட அவர்களுக்கு இப்போதாவது விடயங்கள் புரிந்திருக்கின்றதே என்னுமடிப்படையில் நாம் மகிழ்சியடையலாம்.

தமிழரசுக் கட்சியின் தலைமைக்கான போட்டியில் ஈடுபட்டிருக்கும் சிவ ஞானம் சிறிதரன் அண்மையில் சில விடயங்களை ஒப்புக் கொண்டிருந்தார். அதாவது, இந்தியாவை அணுகுவதில் நாங்கள் சரியாக செயற்படவில்லை. வெறுமனே கொழும்புடன் பேசுவதன் மூலம் மட்டும் பிரச்சினைகளைத் தீர்க்கலாம் என்று எண்ணியது தவறு. இந்த விடயங்களை இந்தக் கட்டுரையாளர் 2010லிருந்து எழுதியும் பேசியும் வருகின்றார்.



எனது எழுத்துகளுடன் பரீட்சயமானவர்கள் இதனை அறிவார்கள். ,தனை ஒரு அரசியல் கல்வியூட்டலாகவே நான் முன்னெடுத்து வருகின்றேன். ஆரம்பத்தில் எனது பார்வைகளை விமர்சித்தவர்கள் அனைவருமே, இப்போது இந்தியாவின் காத்திரமான தலையீடு இல்லாமல் தமிழர் பிரச்சினையில் தீர்வைக் காண முடியாது என்பதை ஒப்புக்கொள்ளும் நிலைமை உருவாகியிருக்கின்றது. என்னைப் போன்றவர்களின் தொடச்சியான கருத்துருவாக்கங்கள் சில தாக்கங்களை ஏற்படுத்தியிருக்கின்றது.ஆனால் தமிழ் அரசியல் சூழல் இன்னும் தெளிவு பெற வேண்டியிருக்கின்றது.

தமிழரின் ஆயுதப் போராட்டம் தோல்வியடைந்து விட்டது. அது ஏன் தோல்வியடைந்தது என்று கேட்டால், அதற்கான ஒரு வரிப் பதில், இந்தியாவின் ஆதரவை ஈழத் தமிழர் இழந்து விட்டனர். தமிழரின் தோல்விக்கான ஒரேயொரு காரணம் இது தான். இந்தியாவின் உடனடி அயல்நாடு ஒன்றில், இந்தியாயை எதிர்த்துக் கொண்டு ஒரு ஆயுதப் போராட்டத்தில் வெற்றிபெற முடியாது. இந்த சாதாரண உண்மையை புரிந்து கொண்டிருந்தால் இந்தளவு அழிவுகளை தமிழர்கள் கண்டிருக்க வேண்டியதில்லை. இந்த உண்மையை புரிந்து கொள்வதற்கு தமிழ் மக்கள் கொடுத்திருக்கும் விலை மிகவும் அதிகம்.

2009இற்குப் பின்னரான காலப்பகுதியில் இந்தியாவை முன்னிலைப்படுத்தியே அனைத்து விடயங்களையும் ஈழத்தமிழர் தரப்புகள் முன்னெடுத்திருக்க வேண்டும். ஆனால் மீண்டும் தமிழ் தலைமைகள் என்போர் தவறிழைத்தனர். தோல்வியை சரி செய்யும் அரசியலை தமிழ் தலைமைகள் முன்னெடுக்கவில்லை. இதற்கு புலம்பெயர் குழுக்களின் தலையீடுகளும் பிரதான காரணம். புலிகள் மீதான கண்மூடித்தனமான விசுவாசம் அறிவுபூர்வமான பார்வைகளைத் தடுத்தது. விடயங்களை சுயவிமர்சனத்தோடு அணுக வேண்டுமென்று கூறியவர்கள் மீது நல்லெறியப்பட்டதால், அவர்கள் ஒதுங்கும் நிலைமை உருவாகியது,

தமிழர் அரசியலை சரி செய்ய வேண்டும் என்றால் எந்த இடத்தில் தோல்வி ஏற்பட்டதோ, எந்த இடத்தை நம்மால் புரிந்து கொள்ள முடியாமல் போனதோ, அந்த இடத்திலிருந்து தான் விடயங்களை ஆரம்பிக்க வேண்டும். அந்த இடம் இந்தியா. போராட்டத்தின் ஆரம்ப காலத்தில் இந்தியா தொடர்பில் சரியாக சிந்தித்தவர்கள் இருந்தனர். இந்தியா என்பது ஒரு கருங்கற் பாறை போன்றது, அதில் தலையை முட்டினால் நமக்குத் தான் நஷ்டம் என்று கூறினர்.

ஆனால் அவ்வாறான ஆலோசனைகளை புறந் தள்ளியே பல்வேறு தவறுகளும் நடந்திருந்தன. இப்போதும் இந்தியாவிற்கு எதிராக பேசுபவர்கள் இருக்கின்றனர். இந்திய அமைதிப் படை காலத்தில் இந்திய ,ராணுவம் கொலைகளை செய்ததாக சிலர் கூற முற்படுகின்றனர். அவர்களின் நோக்கம் இந்திய எதிர்ப்பு வாதத்தை தமிழ் மக்கள் மத்தியில் பரப்புவது தான். ஆனால் இவ்வாறானவர்கள் தமிழ் சமூகத்தில் பலமடைந்தால், தமிழ் மக்கள் இப்போது இருப்பதையும் இழக்க நேரிடும்.

இந்தியா தொடர்பில் எதிர்மறையாக பேசுபவர்கள் ஒரு உண்மையை மக்களுக்குச் சொல்வதில்லை. ஈழத் தமிழர் விடயத்தில் இந்தியாவின் அணுகுமுறை ஆரம்பத்திலிருந்தே நேர்மையாகவே இருந்தது. இந்தியாவிற்கு பிரத்தியேக நலன்கள் இருந்தது எந்தளவிற்கு உண்மையோ, அந்தளவிற்கு, ஈழத் தமிழ் மக்களுக்கு ஒரு நியாயமான அரசியல் தீர்வை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதிலும் இந்தியா உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தது.

சில வருடங்களுக்கு முன்னர் ஒரு நேர் காணலுக்காக சம்பந்தனை சந்தித்த போது, அவர் இந்திராகாந்தியை சந்தித்த அனுபவத்தை பகிர்ந்து கொண்டார். இந்திராகாந்தி தங்களுக்கு கூறினாராம்,

நான் பெரும்பான்மை மக்களின் மனதை புண்படுத்தாத வகையில், ஒரு அரசியல் தீர்வை பெற்றுத் தருவேன் என்றாராம். இதனைக் கூறி விட்டு என்னை நோக்கி சம்பந்தன் கேட்டார். அப்படியாயின் என்ன அர்த்தம் தம்பி. ஆனால் இந்தளவு அனுபவமுள்ள சம்பந்தன் இந்தியா விடயத்தில் பின்னர் தவறிழைத்தார்.

இந்தியாவை சரியாக புரிந்து கொண்டு அதற்கேற்ப விடயங்களை கையாளத் தவறினார். ஆனால் இந்தியா இலங்கையை உடைக்க விரும்பவில்லை. அவ்வாறான நம்பிக்கை தமிழ் இயக்கங்களிடம் இருந்தது. கிழக்கு பாகிஸ்தானை உடைத்தது போன்று எங்களுக்கும் இந்தியா உதவி செய்யுமென்று தவறாக புரிந்து கொண்டனர். ஆனால் இந்த விடயத்தில் இந்தியா நேர்மையான அணுகுமுறையை கொண்டிருந்தது.

இலங்கை விவகாரங்களை கையாளுவதற்காக நியமிக்கப்பட்ட சிறப்பு பிரதிநிதி ஜி.பார்த்தசாரதி இந்தியாவின்

கட்டுரையாளர்:-
தாயகத்தில் இருந்து
- யசீந்திரா -



நிலைப்பாட்டை, அனைத்து ,இயக்கங்களின் தலைவர்களுக்கும் நேர்மையாக கூறியிருந்தார். அதாவது, இந்தியா தனிநாட்டை ஆதரிக்கவில்லை அதே வேளை அதனை அனுமதிக்கவும் மாட்டாது. இந்தியா இவ்வாறு நேர்மையாக கூறிய பின்னர் தான், விடுதலைப்புலிகள் இயக்கம் தனிநாட்டுக்கான போராட்டத்தை முன்னெடுத்தது. அதற்காக இந்தியபடைகளுடனும் மோதியது. இந்திய படைகளை வெளியேற்றுவதற்காக ரணசிங்க பிரேமதாசவுடன் கூட்டுச் சேர்ந்து செயற்பட்டது. தனிநாட்டை அனுமதிக்க முடியாதென்று இந்தியா கூறிய பின்னர் இடம் பெற்ற விடயங்களுக்கு, இந்தியா எவ்வாறு பொறுப்புக் கூற முடியும்?

இந்திய படைகளுடன் விடுதலைப்புலிகள் மோதாமல் இருந்திருந்தால், பல உயிர்களை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது. அனைத்து தவறுகளும் இந்தியாவுடன் மோதும் முடிவால் தான் ஏற்பட்டது. ஒரு பிராந்திய சக்தியுடன் மோதி விட்டு, அதன் பின்னர் அவர்களிடமிருந்து கருணையை எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

யுத்தத்தின் முடிவு இந்தியாவுடன் இணைந்து பயணிப்பதற்கான கதவை தட்டுவதற்கான சூழலை மீண்டும் வழங்கியது. ஆனால் எங்களால் கதவை முறையாக தட்டித் திறக்க முடியவில்லை. 2009 இல், இலங்கை அரசாங்கத்தை பாராட்டி, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திலேயே, அரசியல் பிரச்சினைகளுக்கு இராணுவ ரீதியான முடிவு தீர்வல்ல என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த வேண்டிய அவசியம் வலியுறுத்தப்பட்டிருந்தது. இந்த விடயத்தை கெட்டியாக பற்றிப் பிடித்திருக்க வேண்டும். ஆனால் இந்த விடயத்தில் சம்பந்தன் தவறிழைத்தார். எனினும் ரெலோவின் முயற்சியால் மேற்கொள்ளப்பட்ட நகர்வினால், சம்பந்தனின் தவறு முதல் முதலாக சரி செய்யப்பட்டது.

இந்திய பிரதமருக்கு கடிதம் அனுப்பிய தன் மூலம், இந்தியாவை நோக்கிச் செல்ல வேண்டும் என்னும் பொதுக் கருத்தொன்று ஏற்படுத்தப்பட்டது. ஆனால் இந்த விடயத்தில் இன்னும் அதிகம் பணியாற்ற வேண்டும். எல்லாவற்றுக்கும் முன்னான், இந்திய–இலங்கை ஒப்பந்தத்தை கையாள்வதில் தெளிவான புரிதலும் தடு மாற்றமற்ற உடன்பாடும் ஏற்பட வேண்டும். அது தான் தோல்வியை சரி செய்யும் அரசியலின் ஆரம்பமாக இருக்கும்.

# விஜயகாந்த்:- நினைவுகளும் அரசியலும்

மறைவின் போது ஓர் அரசியல்வாதி அடையாளத்துடன் தனது வாழ்க்கைப் பயணத்தை முடித்துக் கொண்டுள்ள விஜய்காந்த் குறித்துப் பல்வேறு நினைவுகள் எனக்குண்டு. அரசியல்வாதி என்பதைத் தாண்டி, நடிகராகவும் மதுரைக்காரராகவும். மதுரையின் மையமான பகுதியில் அவரது வீடு இருந்தது. மதுரையில் ஆங்கிலப்படங்களும் சோதனை ரீதியான படங்களும் திரையிடப்படும் அரங்குகளில் ஒன்று மிட்லண்ட் திரையரங்கம்.

அதில் படம் பார்க்கச் சென்றபோது நண்பர் ஒருவர் விஜய்காந்த் வீடு இதுதான் என்றும், அவரது தந்தைக்கு உரிமையான அரிசி மாவு ஆலையைக் காட்டியது நினைவில் இருக்கிறது. அவரது தந்தையின் ஊர் இப்போது நான் இருக்கும் திருமங்கலத்திலிருந்து 10 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கும் ஒரு கிராமம் என்ற தகவல் உண்டு.



அங்கிருக்கும் குலசாமி கோவிலுக்கு எப்போதாவது குடும்பத்தோடு வந்து போவார் என்றும் சொல்வார்கள். நான் பார்த்ததில்லை.

வட தமிழ்நாட்டைச் சேர்ந்த பிரேமலதாவைத் திருமணம் செய்து கொள்வதற்கு முன்பு மதுரையில் அவருக்காகப் பெண் தேடினார்கள். தேடிய நண்பர் சினிமா நடிகருக்குப் பெண் தரப் பலரும் மறுக்கிறார்கள் என்று சொன்னார். 1988-89 களில் நான் வாடகைக்கு குடியிருந்த வீட்டின் உரிமையாளரே அவருக்குப் பெண் தரத் தயங்கியதையும் கண்டேன். ஆச்சரியமாக இருந்தது.

பெற்றோர் மறுத்து விட்டாலும் அந்தப் பெண்ணுக்கு விருப்பம் இருந்தது. சில நாட்கள் கழித்து அந்தப் பெண்ணோடு பேசிய போது தெரிந்தது. அந்தத் திருமணம் நடந்திருந்தால் விஜய்காந்தின் அரசியலும் சினிமாவும் தென்மாவட்டங்களோடு முடிந்திருக்கலாம். அரசியலுக்கே வராமலும் போயிருக்கலாம்.

அவர் நடிப்பில் வந்த படங்களில் முதன் முதலாக நான் பார்த்த சினிமா 'தூரத்து இடிமுழுக்கம் (1980) கடைசியாகப் பார்த்தது சொக்கத் தங்கம் ( 2003) இரண்டு படங்களையும் விஜய்காந்த் என்ற நடிகருக்காகப் பார்க்கவில்லை. அந்தக் காலகட்டத்தில் எனக்குப் பிடித்த நடிகையாக இருந்த சௌந்தர்யாவின் கடைசிப் படம் என்பதால் அந்தப் படத்தைப் பார்த்தே ஆக வேண்டும் என்று திரையரங்கிற்கு சென்று பார்த்தேன்.

தூரத்து இடிமுழக்கம் என்ற தலைப்பில் இருந்த குறியீட்டுத் தன்மைக்காகப் பார்க்க நினைத்தேன். ஆனால் திரையரங்குகளில் ஒரு சில நாட்களே ஓடிய படமாகக் காணாமல் போய்விட்டது. ஆனாலும் நண்பர்களின் உதவியால் ஒரு திரைப்படச் சங்கத்தில் பார்க்கக் கிடைத்தது. பாரதிராஜாவின் நிழல்கள் படத்தோடு 1981இல் பன்னாட்டுத் திரைப்பட விழாவில் கலந்து கொண்ட இன்னொரு தமிழ்த் திரைப் படம் அது.

37 ஆண்டுச் சினிமா வாழ்க்கையில் (1979 -2016) 153 படங்கள் நடித்துள்ளதாக இணையத்தில் ஒரு பட்டியல் இருக்கிறது. அவற்றில் 25 படங்களைத் திரையரங்கு சென்று பார்த்திருக்கிறேன்.

முதன் முதலாகத் திரையரங்கில் பார்த்த விஜய்காந்த் சினிமா சட்டம் ஒரு இருட்டறை. ரஜினிகாந்த் என்ற நடிகரின் பெயர், உடல் மொழி போன்றவற்றை நகல் எடுக்கும் முறையை அவராகச் செய்தாரா? அல்லது அவரை இயக்கிய நடிகர்கள் செய்யச் சொன்னார்களா? என்று தெரியவில்லை. தொடக்க காலத்தில் அப்படித்தான் மனதில் பதிந்தார். அவரது சொந்த ஊர் மதுரை என்பதால் படங்கள் வரும்போது மதுரையின் சுவர்களில் பெரும்பெரும் எழுத்துகளில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டதும் மனதில் பதிந்துள்ளது. எஸ்.ஏ.சந்திரசேகர் வழியாக ஒரு இயக்குநரின் நடிகராக திரைத்துறையில் இயங்கினார். ஆனால் பின்னர் தனது நண்பர்களோடு இணைந்து தயாரிப்பு நிறுவனத்தை உருவாக்கிப் புதிய இயக்குநர்களின் படங்களில் நடித்தார். எம்ஜிஆரின் படங்களில் அவரது பாத்திரங்கள் கட்டமைத்த கோபக்கார இளைஞர், நேர்மையின் பக்கம் நிற்கும் அதிகாரி, காதலிகள் விரும்பும் காதலன் கணவன், அன்புக்குரிய தாய்களின் மகன், தேசபக்தியில் ஈடு இணையற்ற ஆளுமை என்பதான பாத்திரங்கள் வழியாக விஜய்காந்த் என்னும் அரசியல்வாதிக்கான பிம்பங்கள் உருவாக்கப்பட்டன. அதற்குள்ளும் சின்னக்கவுண்டர், கேப்டன் பிரபாகரன், சத்ரியன், ரமணா போன்ற குணவார்ப்பு கொண்ட பாத்திரங்களையும் தேர்வு செய்து நடிகர் அடையாளத்தையும் தக்க வைத்தவர்.

அவர் நடிகராக அறிமுகமான போது கல்லூரி மாணவன். மற்ற இடங்களைக் காட்டிலும் மதுரை நகரத்திலும் மாவட்டங்களின் கிராமங்களிலும் அவருக்கு ஏராளமான ரசிகர் மன்றங்கள் உருவானதைப் பார்த்திருக்கிறேன். குறிப்பாக அவரது சாதியின் இளைஞர்களும் இசுலாமிய இளைஞர்களும் அவரது ரசிகர்களில் அதிகம் இருந்தனர். அவரது நண்பரான இப்ராகிம் ராவுத்தரின் முயற்சிகள் இருந்திருக்க வாய்ப்புண்டு.

சினிமா நடிகர்களின் அரசியல் நுழைவையும் செயல்பாடுகளையும் தீவிரமாக விமரிசனம் செய்து எழுதிக் கொண்டிருந்த காலத்தில் தான் அவரது அரசியல் நுழைவும் இருந்தது. மதுரையில் தேமுதிக நடத்திய மாநாட்டை விமரிசித்து உயிர்மை இதழில் விரிவான கட்டுரை ஒன்றை எழுதினேன்.

ஜெயலலிதாவின் அரசியல் தந்திரத்தில் காணாமல் போன விஜயகாந்தின் அரசியலைத் திரும்பவும் கட்டியெழுப்பும் வாய்ப்பு இல்லை. அவரது இன்மையில் பெரும் இழப்பு அவரது ரசிகர்களுக்கு இல்லை. தொண்டர்களுக்கும் இல்லை. அவரது குடும்பத்தினருக்கு இருக்கலாம்.

நன்றி:- உயிர்மை.

# எந்தவொரு வேலையும் செய்யாமலே ஆண்டுக்கு 8300 கோடி சம்பாதிக்கும் நபர் இவர்

பணம் சம்பாதிக்கவும் எதிர்காலம் கருதியும் பலர் இரவு பகல் பாராமல் உழைக்கும் நிலையில், எந்த வேலையும் செய்யாமலே பிறக்கும் புத்தாண்டு முதல் ஒருவர் ஆண்டுக்கு ரூ 8,300 கோடி சம்பாதிக்க இருக்கிறார்.

மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் முன்னாள் தலைமை நிர்வாக அதிகாரியான Steve Ballmer என்பவரே, எந்த வேலையும் செய்யாமல் ஆண்டுக்கு சுமார் 1 பில்லியன் அமெரிக்க டொலர் சம்பாதிக்க இருக்கிறார்.

67 வயதான ஶுவநளந டீயடடஅநச ஏற்கனவே உலகின் தனி நபர் கோடீஸ்வரர்கள் பட்டியலில் இடம் பிடித்துள்ளார். ஃபோர்ப்ஸ் பத்திரிகை வெளியிட்டுள்ள உலகின் பில்லியனர்கள் பட்டியலில் Steve Ballmer தற்போது 10வது இடத்தில் இருக்கிறார்.

இவரது மொத்த சொத்து மதிப்பு என்பது 111.7 பில்லியன் அமெரிக்க டொலர் என்றே கூறப்படுகிறது. மைக்ரோசாப்ட் நிறுவன வரலாற்றில், இவர் 30வது ஊழியர் என்றே கூறப்படுகிறது. அது மட்டுமின்றி, மைக்ரோசாப்ட் நிறுவனத்தில் இவருக்கு 4 சதவிகித பங்கிருப்பதாக கூறப்படுகிறது. அதாவது 333.2 மில்லியன் பங்குகள் அந்த நிறுவனத்தில் இவருக்கு சொந்தமாக உள்ளது. இதனால் ஆண்டுக்கு சுமார் 930 மில்லியன் அமெரிக்க டொலர் தொகையை Steve Ballmer ஈவுத்தொகையாக பெற்று வருகிறார். இது வரையில் மைக்ரோசாப்ட் நிறுவனம் தங்களின் ஒரு பங்கிற்கு ஈவுத்தொகையாக 2.79 டொலர் அளித்து வந்தது. இதனால் ஆண்டுக்கு சுமார் 930 மில்லியன் டொலர் தொகையை Steve Ballmer ஈவுத்தொகையாக பெற்று வந்தார்.ஆனால் தற்போது மைக்ரோசாப்ட் நிறுவனம் ஈவுத்தொகையை 3 டொலராக அதிகரிக்க இருப்பதாக அறிவித்துள்ளது. இதன் பின்னர் அவர் ஆண்டுக்கு ரூ 8,300 கோடி ஈவுத்தொகையாக பெற இருக்கிறார்.



1980ல் மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் 30வது ஊழியராக Steve Ballmer இணைந்துள்ளார். 2000ம் ஆண்டில் பில் கேட்ஸை அடுத்து அந்த நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியாக பொறுப்பேற்றார்.

நீண்ட 14 ஆண்டுகள் மைக்ரோசாப்ட் நிறுவனத்தை முன்னெடுத்து நடத்திய Steve Ballmer 2014ல் அந்த பொறுப்பில் இருந்து ஓய்வு பெற்றார். அதன் பின்னர் இந்தியரான சத்யா நாதெல்லா அந்த பொறுப்புக்கு வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மகிந்தாவின் கனவு மெய்ப்படுமா?

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை தனது காலத்தில் மீண்டும் மக்கள் செல்வாக்குடைய கட்சியாக கட்டியெழுப்பா விட்டால் மற்றைய ராஜபக்சாக்களினால் எதிர்காலத்தில் அதைச் செய்ய முடியாமல் போகலாம் என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச நம்புகிறார் போலும்.

கடந்த நூற்றாண்டின் முற்பகுதியில் இருந்து ருஹஜீணு ராஜபக்சாக்கள் அரசியலில் ஈடுபட்டு வெவ்வேறு பதவிகளை வகித்து வந்த போதிலும், இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் மகிந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக பதவிக்கு வந்த பின்னரே அவர்கள் அரசியலில் அதீத ஆதிக்கத்தைச் செலுத்தும் ஒரு வலிமையான குடும்பமாக வளர்ந்தார்கள். மகிந்தவே குடும்பத்தின் அரசியல் முகம்.

கடந்த வருடத்தைய 'அறகலய' மக்கள் கிளர்ச்சியை அடுத்து அதிகாரத்தில் இருந்து இறங்கிய ராஜபக்சாக்கள் ஒரு சில மாதங்களுக்குள்ளாகவே மீண்டும் அதிகாரத்துக்கு வருவது குறித்துப் பேசத் தொடங்கினார்கள்.

உள்ளூராட்சி தேர்தல்கள் கால வரையறையின்றி ஒத்தி வைக்கப்படுவதற்கு வழி வகுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கெடுபிடி நடவடிக்கைகளுக்கு ஒத்துழைத்த ராஜபக்சாக்கள் எந்த தேர்தல் நடந்தாலும் தங்களது கட்சி வெற்றி பெறும் என்று கூறத் தயங்கவில்லை.

அண்மைக் காலமாக அவர்களின் குறிப்பாக மகிந்தவின் அத்தகைய பேச்சுக்கள் தீவிரமடைந்திருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. கடந்த வருடத்தைய பொருளாதார நெருக்கடிக்கு மூன்று ராஜபக்ச சகோதரர்களும் பொறுப்பு என்று நவம்பர் 14 உயர்நீதிமன்றம் அளித்த வரலாற்று முக்கியத்துவம் தீர்ப்பு தங்களது எதிர்கால அரசியலுக்கு பாரதூரமான பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது என்பது மகிந்தவுக்கு நன்றாகவே தெரியும். என்றாலும் அவர் தீர்ப்பை ஏற்கப் போவதில்லை என்றும் தங்களது ஆட்சிக்காலத்தில் சகல பொளாதாரத் தீர்மானங்களும் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துடனேயே மேற்கொள்ளப்பட்டதால் அதற்கும் பொறுப்பு இருக்கிறது என்றும் கூட கூறினார்.

இரு வாரங்களுக்கு பிறகு நவம்பர் 28 பெருவாரியான புள்ளிவிபரங்களுடன் கூடிய அறிக்கையொன்றை வெளியிட்ட அவர் 2005 – 2014 தனது பதவிக் காலத்தில் பொருளாதாரம் ஆரோக்கியமான வளர்ச்சியைக் கண்டிருந்ததாகவும் அடுத்து பதவிக்கு வந்த 'நல்லாட்சி' அரசாங்கத்தின் செயற்பாடுகளே கடந்த வருடத்தைய பொருளாதார நெருக்கடிக்கு பிரதான காரணம் என்றும் கூறினார்.

2015 தேர்தல்களில் எடுத்த முடிவைப் போன்று அதாவது 'நல்லாட்சி' அரசாங்கத்தைப் பதவிக்கு கொண்டு வந்ததைப் போன்று ஒரு முடிவை மீண்டும் ஒரு போதும் எடுக்கக்கூடாது என்றும் மகிந்த அந்த அறிக்கை மூலமாக நாட்டு மக்களைக் கேட்டுக் கொண்டார். மீண்டும் தங்களைப் பதவிக்கு கொண்டு வரவேண்டும் என்பதே மக்களுக்கான அவரின் செய்தி.

அந்த அறிக்கையை மறுதலித்து பதில் அறிக்கை ஒன்றை 'நல்லாட்சி' அரசாங்கத்தின் தலைவர்களோ அமைச்சர்களோ இது வரையில் வெளியிடவில்லை. அந்த அரசாங்கத்தின் செயற்பாடுகளை நியாயப்படுத்த எவரும் இல்லை என்கிற அளவுக்கு அது ஓர் அநாதை நிருவாகமாக பதிவாகி விட்டது.

2015 – 2019 காலப்பகுதியில் அரசாங்கத்தினால் பெறப்பட்ட சகல கடன்களிலும் சுமார் 90 சதவீதமானவை 2015 ஆண்டுக்கு முன்னரான கடன்களுக்கு வட்டியைச் செலுத்துவதற்காகவே பயன்படுத்தப்பட்டதாக வெறைற் றிசேர்ச் நிறுவனத்தின் ஆய்வு ஒன்று கூறியது. ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரான பொருளாதார நிபுணர் கலாநிதி ஹர்ஷா டி சில்வா கடந்த வாரம் கொழும்பு ஆங்கிலப்பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அதைச் சுட்டிக் காட்டினார். உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு பிறகு சரியாக ஒரு மாதம் கடந்த நிலையில் டிசம்பர் 15 பொதுஜன பெரமுனவின் இரண்டாவது தேசிய



மகாநாடு கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் நடைபெற்றது. அதில் மீண்டும் மகிந்தவே கட்சியின் தலைவராக தெரிவு செய்யப்பட்டார். முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ச வகித்து வந்த தேசிய அமைப்பாளர் பதவி காலியாக விடப்பட்டிருக்கிறது. அதற்கு ஒரு பிரத்தியேகமான அரசியல் காரணம் இல்லாமல் இருக்கமுடியாது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச மகாநாட்டில் கலந்துகொள்ளவில்லை. இலங்கையின் அரசியல் வரலாற்றில் மிகவும் தோல்வி கண்ட ஜனாதிபதி என்ற அபகீர்த்திக்குள்ளான அவரை தங்களது அரசியல் நடவடிக்கைகளில் இருந்து தூரவிலக்கும் ஒரு உபாயத்தை அவரது சகோதரர்கள் அரசியல் அனுகூலத்துக்காக கடைப் பிடிக்கிறார்கள் என்று தெரிகிறது.

அந்த மகாநாட்டில் மகிந்தவும் பசிலும் மாத்திரமே உரையாற்றினார்கள். பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவாசம் வரவேற்புரை நிகழ்த்துவதற்கு மாத்திரம் அனுமதிக் கப்பட்டார். இது ராஜபக்சாக்களை வானளாவப் புகழ்ந்துரைக்கும் பெரு வாரியான உரைகள் நிகழ்த்தப்படும் அவர்களின் வழமையான அரசியல் நிகழ்வுகளில் இருந்து வேறுபட்டதாக இருந்தது. என்றாலும் சாகர காரியவாசம் உரையாற்றிய போது மகிந்தவை நோக்கி சிங்கள பௌத்த மறுமலர்ச்சியின் தந்தை என்று கூறப்படும் அநகாரிக தர்மபாலவுக்கு அடுத்த தேசிய நாயகன் என்று வர்ணித்ததுடன் இன்னொரு ஐம்பது அல்லது நூறு வருடங்களுக்கு பிறகு அவரது வாழ்வும் பணிகளும் பாடப் புத்தகங்களில் பிரத்தியேகமான அத்தியாயமாக பதிவு செய்யப்படும். அவரைப் பற்றி திரைப்படங்கள் தயாரிக்கப்படும் என்று கூறினார்.

மகிந்த தனதுரையில் மீண்டும் அதிகாரத்துக்கு வருவதற்கும் எந்த தேர்தலுக்கும் முகங்கொடுப்பதற்கும் பொதுஜன பெரமுன தயாராகி விட்டது. நாட்டின் தேவைகளுக்கு ஏற்றமுறையில் புதிய பயணம் ஒன்றை கட்சி ஆரம்பிக்கும். புதிய நாடொன்றை உருவாக்குவதற்காக சகல இனங்களைச் சேர்ந்த மக்களையும் எம்முடன் இணைந்து கொள்ளுமாறு அழைக்கிறோம். சகலரதும் பலத்துடன் எந்தவொரு தேர்தலிலும் நாம் வெற்றி பெறுவோம். எமது பயணத்தில் இணைந்து கொள்வதற்கு எமது அழைப் புக்காக பல அரசியல் கட்சிகள் காத்துக் கொண்டிருக்கின்றன என்று கூறினார்.

'போலியான அரசியலுக்கு பதிலாக மெய்யான அரசியல் கலாசாரம் ஒன்றை நாம் உருவாக்குவோம். எமது முயற்சிகளும் பணிகளும் வரலாற்றில் எழுதப் படும் வரை நாம் பாடுபடுவோம். பெருமைக்குரிய நாடாக இலங்கையை உலகின் முன்னால் கொண்டு செல்வதற்கு தவற விட்ட இடத்தில் இருந்து எமது பயணத்தை தொடங்குவதற்கு நாம் தயாராக இருக்கிறோம்' என்றும் அவர் குறிப்பிட்டார்.

மூன்று தசாப்த கால போரின் போது விடுதலை புலிகளின் தலைவர் பிரபாகரனை நேருக்கு நேர் எதிர்கொண்டு போரை முன்னெடுக்க வேறு எந்த தலைவருக்கும் துணிச்சல் இருக்கவில்லை என்று கூறி போர் வெற்றிக்கு மீண்டும் மகிந்த உரிமை கோரினார். சிங்கள மக்கள் மத்தியில் மீண்டும் செல்வாக்கைப் பெறுவதற்கு ராஜபக்சாக்களுக்கு பிரபாகரன் நிச்சயம் தேவைப்படுவார்.

அது மாத்திரமல்ல, மீண்டெழுவதற்கான அவர்களின் பிரயத்தனத்தில் இனவாத அரசியல் மீண்டும் முக்கியமான பாத்திரத்தை நிச்சயமாகக் கொண்டிருக்கும். ராஜபக்சாக்களின் தற்போதைய அணுகுமுறைகளில் விசித்திரமான அம்சம் ஒன்றை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. அதிகாரத்தில் இருந்து இறங்கிய பிறகு தங்களது கட்சியின் பாராளுமன்றப் பெரும்பான்மைப் பலத்தைப் பயன்படுத்தி விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக பதவியில் அமரவைத்த அவர்கள் அவரது நிருவாகத்தில் இருந்து தங்களை வேறுபடுத்திக் காண்பிப்பதில் அக்கறையாக இருக்கிறார்கள்.

ஜனாதிபதி விக்கிரமசிங்க ஐக்கிய தேசிய கட்சியின் தலைவராக இருந்தாலும் அவரது அரசாங்கத்தில் ஓரிருவரைத் தவிர ஏனைய அமைச்சர்கள் எல்லோரும் பொதுஜன பெரமுனவைச் சேர்ந்தவர்களே. அவர்களில் பலர் மகிந்தவின் அரசாங்கத்திலும் கோட்டாபயவின் அரசாங்கத்திலும் அமைச்சர்களாக இருந்தவர்கள். அரசாங்கம் கொண்டு வரும் சட்ட மூலங்கள் மற்றும் தீர்மானங்கள் பொதுஜன பெரமுன உறுப்பினர்களின் ஆதரவுடனேயே சபையில் நிறைவேறுகின்றன.

விக்கிரமசிங்க சமர்ப்பித்த இரு பட்ஜெட்டுகளும் பொதுஜன பெரமுனவின் ஆதரவின்றி நிறைவேறியிருக்க முடியாது. அது மாத்திரமல்ல, ஜனாதிபதி நாட்டை நெருக்கடியில் இருந்து மீட்பதில் திறமையாக செயற்படுகிறார் என்றும் சட்டம் ஒழுங்கை மீண்டும் நிலை நாட்டியிருக்கிறார் என்றும் ராஜபக்சாக்கள் அவ்வப்போது கூறவும் தவறுவதில்லை.

பொதுஜன பெரமுனவின் மாவட்டத் தலைவர்களுக்கு அமைச்சர் பதவிகளைக் கொடுக்க வேண்டும் என்று பசில் ராஜபக்ச ஜனாதிபதியை அடிக்கடி வலியுறுத்திக் கேட்டுவந்ததும் அவர் அதற்கு இடம் கொடுக்காமல் இருந்து வருவதும் எல்லோருக்கும் தெரியும். உண்மை நிலைவரம் இவ்வாறிருக்கும்போது டிசம்பர் 20 முன்னர் அரசாங்கத்தின் வரிக்கொள்கைகள் குறித்து அறிக்கை யொன்றை வெளியிட்ட மகிந்த (20ம் பக்கம் பார்க்க)

சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை

சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சூடுதல்)

ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# மகிந்தாவின் கனவு மெய்ப்படுமா?

(19ம் பக்கத் தொடர்ச்சி) தற்போதைய அரசாங்கத்தைப் பொதுஜன பெரமுன நடத்தவில்லை என்று கூறியிருந்தார். அரசாங்கத்தில் ஓர் அங்கமாக பொதுஜன பெரமுன இருந்தாலும் அரசாங்கத்தின் தலைவர் வேறுபட்ட ஒரு கொள்கையைப் பின்பற்றும் இன்னொரு கட்சியின் தலைவர். அடுத்த தேசிய தேர்தல்கள் வரை உறுதியான அரசாங்கம் ஒன்று பதவியில் இருப்பதை உறுதி செய்ய வேண்டியது பொதுஜன பெரமுனவின் கடமை` என்று கூறி அவர் விக்கிரமசிங்க நிருவாகத்துக்கு அளித்து வரும் ஆதரவுக்கு ஒரு நியாயத்தைக் கற்பிக்க முயற்சிக்கிறார். அத்துடன் புத்தாண்டு முதல் வரி அதிகரிப்புகளின் விளைவாக வாழ்க்கைச் செலவு கற்பனை செய்து பார்க்க முடியாத அளவுக்கு வாட்டி வதைக்கப் போகின்றது என்று மக்கள் ஏங்கிக ˙கொண்டிருக்கும் நிலையில் வரி அதிதரிப்புகளுக்கு எதிராக மகிந்த கருத்து தெரிவித்திருக்கிறார்.

பெறுமதிசேர் வரியை (வற்) தற்போதைய 15 சதவீதத்தில் இருந்து 18 சதவீதமாக அதிகரிப்பதற்கும் ஏற்கெனவே அந்த வரியில் இருந்து விலக்களிக்கப்பட்ட பெருவாரியான பொருட்களையும் சேவைகளையும் மீண்டும் உள்ளடக்குவதற்கும் அண்மையில் பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட சட்டமூலத்தை ஆதரித்து கையை உயர்த்திவிட்டுத் தான் இந்த கதைகளை எல்லாம் மகிந்த நாட்டு மக்களுக்கு கூறுகிறார்.

மகிந்த வற் வரி சட்டமூலத்தை ஆதரித்த அதேவேளை ராஜபக்ச குடும்பத்தின் அரசியல் வாரிசு என்று கூறப்படும் அவரின் மூத்த மகன் நாமல் ராஜபக்ச அதை ஆதரிக்கவில்லை. சட்டமூலம் மீதான வாக்கெடுப்பின்போது நாமல் சபையில் பிரசன்னமாகி இருக்கவில்லை. மக்களுக்கு சொல்லொணா இடர்பாடுகளைக் கொண்டு வரப்போகும் அந்த வரி அறவீட்டை தன்னால் ஆதரிக்க முடியாது என்று அவர் கூறினார். பொதுஜன பெரமுனவின் தலைவர் மகிந்தவும் அந்த கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களும் அந்த சட்டமூலத்தை ஆதரித்த அதேவேளை மகன் நாமல் மாத்திரம் அதை எதிர்த்து வாக்களிக்க சபையில் இருக்கவும் துணிச்சல் இல்லாமல், அதை ஆதரிக்க வேண்டாம் என்று கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வேண்டுகோளும் விடுக்காமல் நாடகமாடுவது இலங்கை மக்களின் விவேகத்தை அவமதிக்கும் ஒரு செயல் என்பதைத் தவிர, வேறு எவ்வாறு கூற முடியும்?

வரிக்கொள்கைகள் புதுவருடத்தில் முக்கியமான அரசியல் பிரச்சினையாக மாறப்போகிறது என்று அறிக்கையில் கூறியிருப்பதன் மூலமாக தேசிய தேர்தல்களில் அதுவே தங்களது பிரசாரத்தின் பிரதான அம்சமாக இருக்கும் என்ற எச்சரிக்கையை மகிந்த ஜனாதிபதிக்கு விடுத்திருக்கிறார்.

நவம்பரிலும் டிசம்பரிலும் மகிந்த வெளியிட்ட இரு அறிக்கைகளும் பிறகு அவ்வப்போது ஊடகங்களுக்கு தெரிவிக்கும் கருத்துக்களும் இன்று நாடு எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடியின் தோற்றுவாய் `நல்லாட்சி' அரசாங்கத்தின் கொள்கைகளிலும் செயற்பாடுகளிலுமே இருக்கிறது என்றும் உயர்நீதிமன்றம் என்னதான் தீர்ப்பில் கூறியிருந்தாலும் பொருளாதார நெருக்கடிக்கு தாங்கள் பொறுப்பு அல்ல என்றும் நாட்டு மக்கள் நம்பவேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறார் என்பதை தெளிவாக உணர்த்துகின்றன.

கடந்த வாரமும் கூட மகிந்த அடுத்த தேர்தலில் பொதுஜன பெரமுன மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றும் என்று நம்பிக்கை வெளியிட்டார். ஒரு விடயத்தை திரும்பத் திரும்பக் கூறுவதன் மூலமாக மக்கள் மத்தியில் ஒருவிதமான உளவியல் ரீதியான தாக்கத்தை ஏற்ப டுத்த முடியும் என்று அவர் நம்புகிறார் போலும். தங்களது ஆட்சிக்காலத்தில் தங்களைப் பற்றி கட்டமைத்த பிரமாண்டமான பிம்பம் எவ்வாறு குறுகிய காலத்திற்குள் தகர்ந்துபோனது என்பதில் இருந்து ராஜபக்சாக்கள் பாடம் படிக்கவில்லை. மக்கள் தங்களைப் பற்றி உண்மையில் என்ன நினைக்கிறார்கள் என்பது குறித்து சரியாகப் புரிந்து கொள்ளாமல் அவர்கள் மீண்டும் அதிகாரத்துக்கு வருவதற்கு கனவு காண்கிறார்கள்.

மக்கள் மத்தியில் தங்களுக்கு மீண்டும் செல்வாக்கை வளர்த்துக் கொள்ளமுடியும் என்று ராஜபக்சாக்கள் நம்புவது ஒரு புறமிருக்க, கடந்த பாராளுமன்ற தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சிக்கு ஏற்பட்டதைப் போன்ற கதி பொதுஜன பெரமுனவுக்கு ஏற்படப் போவதில்லை என்ற ஒரு அபிப்பிராயம் பரவலாக இருக்கிறது என்பதை மறுக்கமுடியாது. ஆனால் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ஒரு ராஜபக்ச களமிறங்கக்கூடிய சாத்தியமில்லை. அந்த தேர்தலில் சந்திக்கக் கூடிய தோல்வி எதிர்காலத்தில் கட்சியை கட்டியெழுப்புவதற்கு பாதிப்பாக அமையும் என்பதை ராஜபக்சாக்கள் அறிவார்கள்.

முன்னரும் இந்த பத்தியில் கூறியதைப் போன்று அடுத்த தேசிய தேர்தல்களில் ராஜபக்ச்க்களின் வியூகங்கள் கடந்த காலத் தவறுகளுக்காக தங்களைப் பொறுப்புக்கூற வைக்காத ஒரு அரசாங்கம் அமைவதை உறுதிப்படுத்துவதாகவே இருக்கும். ஜனாதிபதி வேட்பாளராக தங்களால் களமிறக்கப்படக் கூடியவர்கள் என்று சிலரை ராஜபக்சாக்கள் நாட்டுக்கு காண்பிக்க முயற்சித்தாலும் கூட அவர்களுக்கு விக்கிரமசிங்கவை விடவும் `பாதுகாப்பான தெரிவு இல்லை என்றே கூறவேண்டும்.

வரலாற்றுப் பதிவு இறுதியாக தங்களால் முன்னெடுக்கப்படும் முயற்சிகளும் பணிகளும் வரலாற்றில் எழுதப்படும் வரை பாடுபடுவோம் என்று மகிந்த கூறியதையும் அவரின் வாழ்வு எதிர்காலத்தில் பிரத்தியேகமான அத்தியாயமாக பாடப்புத்தகங்களில் பதிவுசெய்யப்படும் என்று சாகர காரியவாசம் கூறியதையும் குறித்து சில கருத்துக்கள். இலங்கையில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிகளாக இதுவரையில் பதவியில் இருந்தவர்களில் வேறு எவருக்கும் எதிராக நாட்டு மக்கள் கிளர்ச்சி செய்ததில்லை. அது ராஜபக்சவுக்கே நடந்தது. வேறு எந்த ஜனாதிபதியும் பதவிக் காலத்தை முழுமையாக நிறைவு செய்யாமல் இடைநடுவில் பதவியைத் துறந்ததில்லை. அதையும் ஒரு ராஜபக்சவே செய்தார்.

வேறு எந்த ஜனாதிபதியும் மக்கள் கிளர்ச்சிக்கு மத்தியில் நாட்டை விட்டுத் தப்பியோடியதில்லை. ஒரு ராஜபக்சவே அவ்வாறு செய்தார். மக்களினால் முற்று கையிடப்பட்ட நிலையில் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் அலரிமாளிகையில் இருந்து குடும்பத்துடன் ஹெலி கொப்படரில் கிளம்பி படைத்தளம் ஒன்றில் தஞ்சமடைந்த ஒரு பிரதமர் என்றால் அதுவும் ஒரு ராஜபக்சவே.

இலங்கை அரசியல் கடந்த காலங்களிலும் சில உயர்வர்க்க குடும்பங்களின் ஆதிக்கத்தில் இருந்திருக்கிறது. ஆனால் ஒரு ராஜபக்ச அதிகாரத்துக்கு வந்த பிறகு அவரது குடும்பம் அரசியலிலும் ஆட்சிமுறையிலும் அருவருக்கத்தக்க முறையில் மட்டுமீறிய ஆதிக்கத்தைச் செலுத்தியதைப் போன்று அந்த குடும்பங்கள் செய்ததில்லை.

ராஜபக்சாக்களுக்கு எதிராக மாதக் கணக்காக கிளர்ச்சி செய்ததைப் போன்று அந்த குடும்பங்களுக்கு எதிராக மக்கள் ஒரு போதும் வீதியில் இறங்கியதில்லை. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை அறிமுகப்படுத்தப்பட்டு கடந்த நான்கு தசாப்தங்களுக்கும் அதிகமான காலமாக அரச நிருவாகத்தில்(22ம்பக்கம்)



# பொருளாதார முன்னேற்றத்திற்கு அரசியல் தீர்வும் அவசியம்

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டியதன் அவசியம் தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டு வருகின்றது. ஆனால் அரசியல் தீர்வைக் காண்பதற்கான செயற்பாடுகள் இன்றிய நிலையில் வெறும் வாக்குறுதிகள் மட்டுமே அரசாங்க தரப்பினரால் வழங்கப்பட்டு வருகின்றன.

இத்தகைய வாக்குறுதிகள் தமிழ் மக்கள் மத்தியில் பெரும் ஏமாற்றத்தையும் விரக்தி நிலையையும் ஏற்படுத்தி வருகின்றன. 2009ஆம் ஆண்டு இறுதி யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதன் பின்னர் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படுமென்றும் பொறுப்புக் கூறல் விடயத்தில் நீதி நிலைநாட்டப்படும் என்றும் தமிழ் மக்கள் எதிர்பார்த்திருந்தனர்.

யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வர உதவிய இந்தியா உட்பட சர்வதேச நாடுகள் அழுத்தங்களை வழங்கி இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தமிழ் மக்கள் எதிர்பார்த்திருந்தனர். ஆனால், இந்த எதிர்பார்ப்புக்கள் அனைத்தும் கானல் நீராக மாறியுள்ளன.

இதனால் தமிழ் மக்கள் தமது எதிர்காலம் தொடர்பில் பெரும் ஏக்கத்துடன் காலத்தை கழிக்கும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதன் பின்னர் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷ இந்தியாவுக்கு வாக்குறுதி வழங்கியிருந்தார். அதே போன்று பொறுப்புக்கூறல் விடயத்தில் அக்கறை செலுத்தப்படுமென்று முன்னாள் ஐ.நா.வின் செயலாளர் நாயகம் பான் கீ மூனிடம் அன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உறுதி வழங்கியிருந்தார். ஆனால் இந்த உறுதி மொழிகள் காற்றில் பறக்க விடப்பட்டிருந்தன.

நல்லாட்சி அரசாங்கத்தில் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் முயற்சி முன்னெடுக்கப்பட்டது. புதிய அரசியல் யாப்பை உருவாக்குவதன் மூலம் இனப்பிரச்சினைக்கான தீர்வையும் அடைய முடியும் என்று எதிர்பார்க்கப்பட்டது. பாராளுமன்றம் அரசியல் யாப்பு சபையாக மாற்றப்பட்டது. அன்றைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் வழி நடத்தல் குழு அமைக்கப்பட்டு அரசியல் தீர்வு தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

ஐக்கிய இலங்கைக்குள் மீளப்பெறப்பட முடியாத அதிகாரத்தை மாகாணங்களுக்குள் வழங்கும் வகையில் அரசியல் தீர்வு யோசனை உள்ளடங்கிய அரசியல் யாப்புக்கான இடைக்கால அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டிருந்தது.

புதிய அரசியல் யாப்பை உருவாக்குவதற்கான இறுதிக்கட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்ட போது நல்லாட்சி அரசாங்கத்தின் அன்றைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் அன்றைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடு மற்றும் பொது எதிரணியான பொதுஜன பெரமுனவின் கடும் எதிர்ப்பு என்பனவற்றின் காரணமாக இந்த முயற்சியும் இடைநடுவில் கை விடப்பட்டது. நல்லாட்சி அரசாங்க காலத்தில் இனப்பிரச் சினைக்கு தீர்வு பிறக்கும் என்ற எதிர் பார்ப்பும் ஏமாற்றத்தையே அழித்திருந்தது.

இந்த நிலையில் கடந்த வருடம் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றதையடுத்து இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அதற்கு சகலரும் ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டுமெனவும் அழைப்பு விடுத்திருந்தார்.

கடந்த பெப்ரவரி 4ஆம் திகதி நாட்டின் 75ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடுவதற்கு முன்னர் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண சகலரும் ஒத்துழைக்க வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கோரியிருந்தார்.

பாராளுமன்றத்திலும் பாராளுமன்றத்திற்கு வெளியிலும் இத்தகைய அழைப்புக்களை விடுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியல் தீர்வு தொடர்பில் ஆராய்வதற்காக கடந்த டிசம்பர் மாதம் சர்வகட்சி குழுக் கூட்டத்தை கூட்டியிருந்தார்.

அதனைத் தொடர்ந்து இரண்டாவது சர்வகட்சி குழுக் கூட்டம் ஜனவரி மாதம் இடம் பெற்றிருந்தது. இந்தக் கூட்டங்களின் போது 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதன் மூலம் பிரச்சினைக்கு தீர்வு காண்பதன் அவசியம் தொடர்பில் பல்வேறு கட்சிகளின் தலைவர்களும் வலியுறுத்தியிருந்தனர்.



இந்த நிலையில் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்திருந்தார். ஆனால் அதற்கு எதிர்ப்புக் கிளம்பியதையடுத்து அந்த நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டது.

பாராளுமன்றமே இந்த விடயம் தொடர்பில் தீர்மானத்தை எடுக்க வேண்டும் என்று ஜனாதிபதி அறிவித்திருந்தார். இந்தப் பின்னணியில் கடந்த 21ஆம் திகதி மீண்டும் வடக்கு, கிழக்கு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களை ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்த ஜனாதிபதி ரணில் விக்ககிரமசிங்க அரசியல் தீர்வு தொடர்பில் கலந்துரையாடியிருந்தார்.

இந்தக் கலந்துரையாடலில் இந்திய — இலங்கை ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டுமென்றும் அதன் கீழான 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதன் மூலம் நல்லெண்ணத்தை வெளிக்காட்ட வேண்டுமென்றும் இலங்கை தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் இரா. சம்பந்தன் வலியுறுத்தியிருந்தார்.

நல்லெண்ணம் என்ற போர்வையில் இனியும் ஏமாற முடியாது என்றும் எனவே, இந்திய — இலங்கை ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறும் சம்பந்தன் எடுத்துக் கூறியிருந்தார்.

இந்தச் சந்திப்பின்போது மாகாண சபைகளை பலப்படுத்த நடவடிக்கை எடுப்பதாகவும் அடுத்த பாராளுமன்றத்தில் ஒரு வருட காலத்துக்குள் புதிய அரசியல் யாப்பை உருவாக்குவதன் மூலம் அரசியல் தீர்வுகாண நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி உறுதி வழங்கியிருந்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணப்பட வேண்டுமென்று தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றார். அதற்கான ஒத்துழைப்புக்களையும் தொடர்ச்சியாக கோரி வருகின்றார். ஆனாலும் அரசியல் தீர்வு குறித்து பேசுவதற்கோ அல்லது அதற்கு ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கோ தெற்கில் இனவாத சிங்களத் தலைமைகள் விரும்பவில்லை. அதற்கு எதிரான செயற்பாட்டிலேயே இத்தகைய இனவாத தலைவர்கள் செயற்பட்டு வருகின்றனர். இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் ஒத்துழைப்பு வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த புதன்கிழமை மீண்டும் கோரிக்கை விடுத்திருக்கின்றார். பதுளையில் இடம்பெற்ற பாடசாலை நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய ஜனாதிபதி, நாட்டில் நிலையான பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதும் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண்பதும் தற்போது நிறைவேற்றப்பட வேண்டிய பிரதான கடமைகளாகவுள்ளன.

எனவே, எந்தக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தினாலும் அந்த இலக்குகளை அடைவதற்கு ஒன்றிணையுமாறு அழைப்பு விடுத்திருக்கின்றார். நாட்டிலுள்ள அனைத்து மக்களின் உரிமைகளையும் பாதுகாக்கும் அதேவேளை நல்லிணக்கம் தொடர்பான தீர்க்கப்படாத பிரச்சினைகளுக்கு விரைவான தீர்வுகளை வழங்க எதிர்பார்ப்பதாகவும் எதிர்வரும் மார்ச் மாதம் அது தொடர்பான விசேட அறிக்கையொன்றை வெளியிடவுள்ளதாகவும் ஜனாதிபதி இதன்போது தெரிவித்திருக்கின்றார். இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் ஜனாதிபதி தொடர்ச்சியாக ஒத்துழைப்புக்களை கோரி வருகின்றார். ஆனால் அதற்கான ஒத்துழைப்புக்கள் கிடைப்பதாக தெரியவில்லை. தற்போது நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதும் இனப்பிரச்சினைக்கான தீர்வும் முக்கியமான இரு பணிகள் என்று ஜனாதிபதி கூறியுள்ளமை யதார்த்தபூர்வமான கருத்தாகவே அமைந்திருக்கின்றது.


கட்டுரையாளர்:
இலங்கையில் இருந்து
பேராசிரியர்
– K.T.கணேசலிங்கம் –





உண்மையிலேயே நாடு பொருளாதார ரீதியில் முன்னேற வேண்டுமானால் நாட்டில் இனங்களுக்கிடையே முரண்பாடுகள் இருக்கக் கூடாது. இத்தகைய முரண்பாடுகள் நீடிக்குமானால் அது நாட்டை பொருளாதார ரீதியில் கட்டியெழுப்புவதற்கு எந்தவகையிலும் உதவப் போவதில்லை.

கடந்த 3 தசாப்த காலமாக நாட்டில் நிலவிய யுத்தத்தின் கோர விளைவுகளையே தற்போது நாம் அனுபவித்து வருகின்றோம். நாடு பெரும் அதல பாதாளத்துக்குள் வீழ்வதற்கு இந்த யுத்தம் பெரும் காரணமாக அமைந்திருந்தது.


இன்றைய பொருளாதார நெருக்கடிக்கும் யுத்தத்தின் விளைவுகளே காரணமாக அமைந்திருக்கின்றன. நாட்டை பொருளாதார ரீதியில் கட்டியெழுப்புவதுடன் இனங்களுக்கிடையிலான முரண்பாடுகளை தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும். அவ்வாறு காணப்பட்டால் தான் சகல சமூகங்களும் ஒன்றிணைந்து நாட்டை கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுக்க முடியும். இதன் மூலம் தான் (22ம் பக்கம் பார்க்க)





# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?





மேடராசி அன்பர்களே! கடின உழைப்பினால் வெற்றி பெறுவீர்கள். வீண் செலவு குறையும். எதிலும் அவசர முடிவு எடுப்பதை தவிர்ப்பது நல்லது. எதையும் ஆக்கபூர்வமாக செய்ய வேண்டும் என்ற எண்ணம் தோன்றும். மன தெளிவு உண்டாகும். திடீர் இடமாற்றம் உண்டாகலாம். தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் சாமர்த்தியமாக செயல்பட்டு வெற்றி காண்பார்கள். உத்யோகத்தில் இருப்பவர்கள் திறமையாக செயல்படுவார்கள்.





ரிஷபராசி அன்பர்களே! மனதில் இருந்த டென்ஷன் குறையும். உடல் ஆரோக்கியம் உண்டாகும். விரும்பிய படி காரியங்கள் நடக்கும். நீண்ட தூர தகவல்கள் நல்ல தகவல்களாக இருக்கும். தொழில் வியாபாரம் முன்னேற்றம் காணப்படும். லாபம் எதிர்பார்த்தபடி இருக்கும். புதிய வாடிக்கையாளர்கள் ஏற்படுவதுடன் அவர்களால் நன்மையும் உண்டாகும். வேலைகளுக்கு பாராட்டும் பண உதவியும் கிடைக்கலாம். நற்பலன் தரும் வாரமாகும்.





மிதுனராசி ராசி அன்பர்களே! எதிர்பார்த்த நல்ல பலன்கள் அனைத்தும் கிடைக்கும். திறமையான பேச்சின் மூலம் காரியங்களை சாதிப்பீர்கள். எதிர்த்து செயல்பட்டவர்கள் விலகிச் சென்று விடுவார்கள். தெய்வ பிரார்த்தனை மனதுக்கு நிம்மதியையும், ஆறுதலையும் தரும். சூரியன் சஞ்சாரத்தால் பணவரத்து கூடும். அரசாங்க காரியங்கள் சாதகமாக பலன் தரும். தொழில் வியாபாரம் லாபகரமாக நடக்கும்.




கடகராசி அன்பர்களே! செய்யும் காரியத்தில் மனதிருப்தி கிடைக்கும். அடுத்தவர்களுக்காக எந்த பொறுப்பையும் ஏற்காமல் இருப்பது நல்லது. மற்றவர்களுக்காக வீண் அலைச்சல், செலவு செய்ய வேண்டி இருக்கும். தொழில் வியாபாரம் திருப்திகரமாக நடந்தாலும் எதிர்பார்த்த லாபம் குறையலாம். வியாபாரம் தொடர்பான பணம் பரிவர்த்தனையில் கவனம் தேவை. உத்யோகத்தில் இருப்பவர்கள் எதிர்பார்த்த பலன் கிடைப்பதில் தாமதம் உண்டாகும்..





சிம்மராசி அன்பர்களே! எதையும் சுலபமாக புரிந்த கொண்டு செயல்படுவீர்கள். ராசியாதிபதி புதன் ஏழாமிட சஞ்சாரம் நல்ல மாற்றத்தை கொடுக்கும். ஏதாவது ஒரு வகையில் மனகுழப்பம் ஏற்பட்டு நீங்கும். சாதாரணமாக பேசப்போக அது சண்டையாக மாறலாம். வேளை தவறி உணவு உண்ண வேண்டி இருக்கும். பொருட்களை கவனமாக பார்த்துக் கொள்வது நல்லது. அலைச்சல் ஏற்படும்.




கன்னிராசி அன்பர்களே! மன தில் எண்ணியதை எப்பாடு பட்டாவது செயல்படுத்துவீர்கள். மற்றவர்களுடன் வீண்பகை விலகும். அடுத்தவரின் செயல்கள் உங்கள் கோபத்தை தூண்டுவதாக இருக்கலாம் ஆத்திரப்படாமல் அனுசரித்து செல்வது நன்மை தரும். தொழில் வியா பாரத்தில் மெத்தனப் போக்கு காணப்படும். தொழில் தொடர்பான அலைச்சல் அதிகரிக்கும். வாடிக்கையாளர்களை அனுசரித்து செல்வது வியாபார வெற்றிக்கு உதவும்.





துலாம்ராசி அன்பர்களே! வீண் கவலைகள் நீங்கும். சுபச்செலவு அதிகரிக்கும். ராசிக்கு 10ல் சஞ்சாரம் செய்யும் சுக்கிரன் இடமாற்றத்தை ஏற்படுத்துவார். எடுத்த காரியத்தை செய்து முடிப்பதில் தாமதம் ஏற்படலாம். வார தொடக்கத்தில் அடுத்தவருக்கு உதவபோய் வீண் பிரச்னையில் சிக்கிக் கொள்ள நேரலாம். புதிய நட்பு உண்டாகலாம். தொழில் வியாபாரத்தில் போட்டிகளை சந்திக்க வேண்டி இருக்கும். வியாபாரம் தொடர்பான அலைச்சலும் புதிய ஆர்டர் பற்றிய கவலையும் ஏற்படும்.





விருச்சிகராசி அன்பர்களே! திறமையை வெளிப்படுத்தி வெற்றி பெறுவீர்கள். எதிர்ப்புகள் விலகும். எதிலும் உடனடியாக முடிவு எடுக்க முடியாத நிலை ஏற்படும். மற்றவர்கள் மத்தியில் உங்களது பேச்சுக்கு முக்கியத்துவம் இருக்காது. அறிவுரைகள் கூறுவதை தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் சில சிக்கலான கட்டங்களை சந்திக்க நேரிடும். முடிவில் எதிர்பார்த்தபடி சாதகமான பலன் உண்டு. ஐயப்பன் வழிபாடு சாலச் சிறந்தது.








தனுசுராசி அன்பர்களே! மனதில் தைரியம் அதிகரிக்கும். வீட்டிலும் வெளியிலும் உங்களது செயல்களுக்கு ஆதரவு கிடைக்கும். ராசியில் சனி இருப்பதால் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தொழில் வியாபாரம் திருப்தியாக நடக்கும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். வாடிக்கையாளர்கள் மத்தியில் மதிப்பு கூடும். உத்யோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். வேலை தேடுபவர்களுக்கு புதிய வேலை கிடைக்கும்.




மகரராசி அன்பர்களே! திட்டமிட்டு எந்த காரியத்தையும் செய்வீர்கள். எந்த இடத்தில் பேசும் போதும் கவனமாக பேசுவது நல்லது. வாக்குறுதிகளை கொடுப்பதை தவிர்ப்பது நன்மை தரும். விருப்பத்திற்கு மாறாக காரியங்கள் நடக்கலாம். மனம் தளராமல் இருப்பது நல்லது. வீண் ஆசைகள் தோன்றலாம். தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் பார்ட்னர்களை அனுசரித்து செல்வது வியாபார வளர்ச்சிக்கு உதவும்.




கும்பராசி அன்பர்களே! எந்த நிலையிலும் தன்னம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். எதிலும் முன்னேற்றம் காண முடியும். எடுத்த காரியத்தை வெற்றிகரமாக செய்து முடிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள். வெளியூர் பயணங்கள் சாதகமான பலன் தரும். தொழில் வியாபாரம் மூலம் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். தொழில் வியாபார வளர்ச்சிக்கு தேவையான ஆதரவு கிடைக்கும்.




மீனராசி அன்பர்களே! வீண் செலவுகளை குறைப்பது நல்லது. ராசிக்கு 4ல் ராசிநாதன் சுக்கிரன் இருப்பது நன்மை தரும். எந்த ஒரு வேலையையும் செய்யும் முன் அதில் உள்ள நல்லது கெட்டதை ஆராய்ந்து செய்வது நல்லது. பயன் தராத முயற்சிகளை தவிர்ப்பது நன்மை தரும். தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் மிகவும் சாமர்த்தியமாக செயல்படுவது நன்மை தரும். தொழில் போட்டிகள் உண்டாகலாம்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

## மகிந்தாவின் கனவு மெய்ப்படுமா?

(20ம் பக்கத் தொடர்ச்சி) எதேச்சாதிகாரம் படிப்படியாக அதிகரித்து வந்தபோதிலும் ஒரு ராஜபக்சஜனாதிபதியாக வந்த பின்னரே எதேச்சாதிகாரம் உச்சத்துக்குப் போனது.

ஆட்சிமுறையின் கெடுதியான போக்குகள் சகலவற்றையும் (உயர்மட்டத்தில் ஊழல் மோசடி, பொதுச் சொத்துக்கள் சூறையாடல், அதிகார துஷ்பிரயோகம், சட்டம் ஒழுங்கு சீர்குலைவு,பொறுப்புக் கூறலை அலட்சியம்செய்தல், பேரினவாத அரசியலை முன்னெடுத்து சிறுபான்மை இனத்தவர்களின் இருப்பை ஆபத்துக்குள்ளாக்குவது) உருவகிப்பவர்களாக விளங்கியதும் ராஜபக்சாக்களே.

ராஜபக்சாக்கள் எதிர்காலத்தில் எதைச் செய்தாலும் வரலாற்றில் இருந்து அவற்றையெல்லாம் ஒரு போதும் அழித்து விட முடியாது. முடியாது. நவீன இலங்கையின் மிகவும் மோசமான ஆட்சியாளர்கள் ராஜபக்சாக்களே என்பது வரலாற்றில் ஏற்கெனவே பதிவாகி விட்டது.

இரண்டாவது உலகப்போரின் போது ஒரு கட்டத்தில் ஜேர்மன் விமானப்படைக்கு பிரிட்டிஷ் விமானப்படை வீரர்கள் ஏற்படுத்திய படுமோசமான இழப்பை பாராட்டிய போது வின்ஸ்ரன் சேர்ச்சில் பிரிட்டனின் வரலாற்றில் முன்னர் ஒரு போதும் சொற்ப எண்ணிக்கையான வீரர்கள் குறுகிய ஒரு காலப்பகுதியில் பெரும் எண்ணிக்கையானவர்களுக்கு அது போன்ற இழப்பை ஏற்படுத்தியதில்லை என்று கூறினாராம்.

இந்த உவமானம் எதற்காகக் கூறப்படுகிறது என்பதை புரிந்து கொள்வதில் வாசகர்களுக்கு சிரமம் இருக்காது என்று நம்புகிறோம்.

## பொருளாதார முன்னேற்றத்திற்கு...

(21ம் பக்கத் தொடர்ச்சி) புலம் பெயர்ந்துள்ள தமிழர்கள் உட்பட்ட இலங்கையர்களின் ஒத்துழைப்புக்களையும் பெற்றுக்கொள்ள முடியும். சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையையும் வெற்றி கொள்ள முடியும். எனவே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியதைப் போன்று பொருளாதார அபிவிருத்தியிலும் அரசியல் தீர்வு விவகாரத்திலும் உடனடியாக கவனம் செலுத்தப்பட வேண்டும். அதற்கு சகல தரப்பினரும் ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டியதே இன்றைய தேவையாகும்.

## தமிழரசின் தலைமைக்கு ஶ்ரீதரனே தகுதியானவர்

(3ம் பக்கத் தொடர்ச்சி) குறிக்கோள்கள் வேண்டுதல்கள் எதிர்பார்ப்புகள் என்ன? என்பதெல்லாம் அவருக்கு தெரிந்த விடயம். ஆகவே சிறீதரன் தான் தலைவராக வர வேண்டும் என்பது என்னுடைய கருத்து. இதே நேரத்தில் என்னுடைய மாணவரை (சுமந்திரன்) பற்றியும் நான் கட்டாயம் கூற வேண்டியிருக்கிறது. அவருக்குத் தலைவராவதற்கான எல்லாத் தகுதிகளும் இருக்கின்றன. மொழியறிவு, சட்ட அறிவு, பரந்துபட்ட மக்கள் தொடர்புகள் நாடு முழுவதும் இருக்கின்றன. ஆனால், அவரிடம் ஆணவமும் அகந்தையும் கூடுதலாக இருக்கின்றது. மக்களை மதிக்கும் தன்மை அவரிடம் இல்லை. இதை நான் கவனித்து இருக்கிறேன். அப்படிப்பட்ட ஒருவரை தலைவராக தெரிந்தெடுத்தால் அங்கு சுயநலம் தான் தலைவிரித்தாடும்.

அதாவது கட்சியை சுயநல காரணங்களுக்காக மாற்றக்கூடும் – பாவிக்கக் கூடும் என்ற அச்சம் எங்களுக்கு உள்ளது. இதனால், அவரை தலைவராக்குவதில் சில சிரமங்கள் இருக்கக்கூடும். இது வருங் காலத்திலே தமிழ் மக்களுக்கு நன்மையை கொடுக்காது என்பது என்னுடைய கருத்து. இதேநேரத்தில், சுமந்திரன் தன்னை விட விஞ்சியவர் வேறு ஒருவர் இல்லை – தன்னுடைய மதத்தை விட வேறு மதங்கள் உண்மையாக இருக்க முடியாது என்றவிதமான கருத்துகளையும் கொண்ட நபர்.

தமிழரசு கட்சியின் தலைமைக்கு போட்டியிடும் யோகேஸ்வரன், கிழக்கு மாகாணத்தை சேர்ந்தவர் நல்லவர். ஆனால், அவர் எந்த வகையிலே வல்லவர் என்பது எனக்குத் தெரியாது. அவரை மற்ற இருவருடன் சேர்த்துப் பார்க்கும் போது அவர்களின் தரத்துக்கு அவர் வல்லவர் என்று கூற முடியாது எனக்கு தெரிந்த வரையில். கிழக்கு மாகாணத்தை சேர்ந்த ஒருவரைத் தலைவராகத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற அவசியம் – கட்டாயம் இருக்கிறது என்ற வகையில் அவரை (யோகேஸ்வரனை) தெரிவு செய்ய வேண்டி வந்தால் அதுபற்றி நான் கூறுவதற்கு எதுவும் இல்லை.

ஆனால், அப்படியில்லை என்றால் மற்ற இருவரிடையே நான் தலைவராகத் தெரிவு செய்வது சிறீதரனை. காரணம், அவர் எல்லோருடனும் சேர்ந்து போகக்கூடியவர். வேறு கட்சிகளுடன் சேர்ந்து பயணிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால் சிறீதரனால் அது முடியும். சுமந்திரனால் அது முடியாது. ஏனென்றால், அவர் தான் நினைத்தது நடக்க வேண்டும் தன்னுடன் சேர்ந்து மற்றவர்கள் நடக்க வேண்டுமே தவிர தான் மற்றவர் களுடன் சேர்ந்து பயணிக்க வேண்டும் என்றால் அவர் வர மாட்டார். ஆகவே, என்னைப் பொறுத்த வரை அப்படி பார்க்கும் போது சிறீதரனே பொருத்தமானவர் என்றார்.

ஆசிரியர் குறிப்பு– தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை உடைத்துக் கொண்டு வெளியேறி புதியகட்சி ஒன்றை ஆரம்பித்து தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் தனது கட்சியின் உறுப்பினர்களையே மதிக்காமலும் ஆலோசனைகள் பெறாமலும் தான் ஒரு நீதிபதி என்ற மமதையில் நடந்து கொண்டு தனக்காக பாடுபட்ட திரு அருந்தவபாலன் போன்றவர்களையே மதிக்காத இவர் இன்னொரு கட்சியன் தலைவராக யார் வர வேண்டுமென எப்படி கதை விடலாம்? அது மாத்திரமல்ல மதம் கடந்த மகத்தான தலைவராக இன்று வரை போற்றப்படுகின்ற தந்தை செல்வா உருவாக்கிய தமிழரசுக் கட்சியை மதம் சார்ந்து சிந்திக்கும் செயற்பாட்டை இவர் ஏன் முன்னெடுக்க முனைகின்றார்? யாருக்கு சேவகம் செய்யத் துடிக்கின்றார்?

## கருணையாளர்களின் கவனத்திற்கு!

அன்பு இல்லக் குழந்தைகளுக்கு 2024 ஜனவரி 10ம் திகதி முதல் 31ம் திகதி வரை உணவளிக்கவுள்ள கருணையாளர்கள் தயவு செய்து 10 ஜனவரி 2024 திகதிக்கு முன்னதாக தங்கள் விபரங்களைத் தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம். காரணம் பெரிதாக ஒன்றுமில்லை. இரு வார கால விடுமுறை தேவைப்படுகின்றது. அனைத்துச் செயற்திட்டங்களும் வழமை போன்று நடைபெறும். தொடர்புகளுக்கு:– ஈழநாடு பரமேஸ் 416 841 9600

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

## Family Law
- Divorce
- Custody & Support

## Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

## Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

## Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

## Sasitharan Law Professional Corporation
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.


## *At Need Funeral Arrangements*
We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com













# சினிமாவில் மட்டுமல்ல அரசியலிலும் விஜயகாந்த் கேப்டன் இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி புகழாராம்



சினிமாவில் மட்டுமல்ல விஜயகாந்த் அரசியலிலும் கேப்டனாக இருந்து வந்திருக்கிறார் என பிரதமர் மோடி புகழ்ந்து கூறியுள்ளார். திருச்சி விமான நிலையத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள முனையம் உள்ளிட்ட பல் வேறு திட்டங்களை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். இதில் பேசிய பிரதமர் மோடி, கடந்து வருடம் டிச.28-ம் திகதி மறைந்த நடிகரும், தேமுதிக தலைவருமான விஜயகாந் குறித்து உருக்கமாக பேசியுள்ளார். பிரதமர் மோடி கூறியதாவது கடந்த 2023வது வருடத்தின் கடைசி சில வாரங்கள் கடினமானதாக இருந்திருக்கிறது. கனமழை மக்களைக் கடுமையாக பாதித்தது.

மேலும், சில நாட்களுக்கு முன்பு விஜயகாந்தை இழந்திருக்கிறோம். சினிமாவில் மட்டுமல்ல அவர் அரசியலிலும் கேப்டனாக இருந்து வந்திருக்கிறார். திரைப்படங்களில் அவரது செயல்பாடு காரணமாக மக்களின் இடத்தில் தனி இடம் பிடித்தார். அரசியல்வாதியாகவும் தேசிய நலனுக்கு அவர் முன்னுரிமை கொடுத்து வந்திருக்கிறார். அவருக்கு என் அஞ்சலியை காணிக்கை ஆக்குகிறேன். அவரது குடும்பத்திற்கும் எனது ஆறுதலைதெரிவித்துக் கொள் கிறேன்'' என்றார். இது மட்டுமல்லாது, மறைந்த விஞ்ஞானி எம்.எஸ். சுவாமிநாதனுக்கும் தனது இரங்கலைத் தெரிவித்தார் பிரதமர் மோடி.

## அன்பு இல்லக் குழந்தைகளுக்கு உணவு வழங்கும் கருணையாளர்களின் கவனத்திற்கு!

அன்பு இல்லக் குழந்தைகளுக்கு 2024 ஜனவரி 10ம் திகதி முதல் 31ம் திகதி வரை உணவளிக்கவுள்ள கருணையாளர்கள் தயவு செய்து 10 ஜனவரி 2024 திகதிக்கு முன்னதாக தங்கள் விபரங் களைத் தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம். காரணம் பெரிதாக ஒன்றுமில்லை. இரு வார கால விடுமுறை தேவைப்படு கின்றது. அனைத்துச் செயற்திட்டங்களும் வழமை போன்று நடை பெறும். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

